# சத்திய வேத பாதுகாவலன்

Telegram: "CATHOLIC PRESS", JAFFNA. | 1876ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது | Telephone: No. 300.

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

82-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1957-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 14-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 44-ம் இலக்கம்


## அமெலியா மோட்சத்தில் இருக்கிறாளா?

மரித்தவிசுவாசிகளின் நலனில் சிரத்தைகொண்டு ஒவ்வொருவருடமும் பரிசுத்தமாதாவாகிய திருச்சபை கார்த்திகை மாதத்தை உத்தரிக்கிற ஆத்துமாக்களின் பக்திக்கென்று ஒதுக்கிவைக்கின்றது.

தங்கள் பாவங்களுக்கேற்ற பரிகாரஞ்செய்யும்வரையும் உத்தரிக்கிறஸ்தலத்திற் சிறைப்படுத்தப்பட்டிருக்கும் ஆத்துமாக்களின் வேதனையைக் குறைக்கக் கார்த்திகைமாதத்தில் திவ்வியபூசைப்பலிகள், செபதபமுதலாம் பக்திமுயற்சிகள் விசேஷவிதமாக ஒப்புக்கொடுக்கப்படுகின்றன. இந்தப் பரிசுத்த ஆத்துமாக்கள் உத்தரிப்புஸ்தலத்தில் எவ்வளவுகாலம்இருந்து அவதிப்படவேண்டி இருக்குமென்று திருச்சபை நமக்குப்படிப்பிப்பதில்லை. ஆனால், சிலஆத்துமாக்கள் பலநூறு வருடங்களாக வேதனைப்படுகின்றன என அறியக்கிடக்கிறது. தனது தோழியாகிய அமெலியா மோட்சத்தில் இருக்கிறாளா வென்று லூசியா தேவதாயாரிடம் கேட்டபோது, அவள் உலகமுடிவுபரியந்தம் உத்தரிக்கிறஸ்தலத்தில் இருப்பாள் என்று தேவதாயார் பதில்கொடுத்தா. எவ்வளவு பயங்கரமானபதில்! எப்படியாயினும், இந்த ஆத்துமாக்களுக்காக நாம் ஒப்புக்கொடுக்கும் பூசைப்பலிகளும், செபதபங்களும் அவர்களின் உத்தரிப்புக்காலத்தைக் குறைக்க உதவுகின்றனஎனத் திருச்சபை போதிக்கிறது. எவ்வளவு ஆறுதலான போதனை! ஆனதால் "பாவங்களினின்று இரட்சிக்கப்படும்படி மரித்தவர்களுக்காக வேண்டிக்கொள்ளுவது பரிசுத்தமும், பிரயோசனமுமுள்ள எண்ணமாயிருக்கின்றது."

கணக்கில்லாத இந்த ஆத்துமாக்களில் எங்கள்கிட்டிய உறவினரும், சிநேகிதரும் இருக்கக்கூடும். அவர்கள்எங்கள்உதவியிலும், உதாரகுணத்திலும்மாத்திரமே முற்றாகத் தங்கியிருக்கிறார்கள். அவர்கள் தங்களுக்குத்தாங்களே எவ்விதஉதவியும் செய்யமுடியாது எங்கள்உதவியையே பார்த்தவண்ணம் இருக்கிறார்கள். போர்பொருதும் திருச்சபையின்மக்களாகியநாங்கள் அவர்களின் அவதியைக்குறைக்கவும், உத்தரிப்புக்காலத்தைக் குறைக்கவும் போதியசாதனங்கள் உள்ளவர்களாக இருக்கிறோம். உத்தரிக்கிறஸ்தலத்து ஆத்துமாக்களுக்காக நாம்ஒப்புக்கொடுக்கும் ஒவ்வொருபூசைப்பலியும் நமதுகாலம் வரும்போது தேவ சந்நிதானத்தின் முன்பாக எமதுபாவங்களின் மன்னிப்புக்கும், தேவஇரக்கத்தைப் பெறுவதற்கும் மனுப்பண்ணும்என்பதில் சந்தேகமில்லை. சொல்லமுடியாத அவஸ்தைகளும், தாங்கமுடியாத உபத்திரவங்களும் அனுபவிக்கும் உத்தரிக்கிறஸ்தல ஆத்துமாக்களின் சாந்திக்காக மன்றாடக்கூடிய இந்தக்காலத்தில் நாங்கள் எங்கள்கவலையீனத்தாலும், அசட்டைத்தனத்தாலும் மன்றாட மறந்தால் அதைநினைக்குங்காலம் வரும்போது எவ்வளவு பயப்பிராந்தி கொள்ள நேரிடும்! உத்தரிக்கிறஸ்தலத்தின் வேதனைகளைப்பற்றி ஜெனோவாவின் அர்ச். கத்தரீனம்மாள் பின்வருமாறுசொல்லுகிறாள்: "விசேஷ அருளினால் தேவன் தெரியப்படுத்தினால்அல்லாது அவர்கள்அனுபவிக்கும் அகோர வேதனையை — அதன்தன்மையை எந்தநாவும் விபரிக்கவும்முடியாது; எந்தமனதும் உருபிகரிக்கவும் முடியாது."

இவ்வுலகத்திலிருந்து நாம் மறுஉலகஞ்சென்றபின், கொஞ்சக்காலத்துள் எங்கள்உறவினரும், சிநேகிதரும் நம்மைமுற்றாய் மறந்துவிட ஏதுவாகலாம். தன் ஒரேயொருமகனைக் கட்டித்தழுவி அழுத அருமந்தஅன்னையே சிலவருடங்கள்கழியச் சிலவேளை அவனைமறக்கக்கூடும். எவ்வளவுஆறாத் துயரமும் காலச்சக்கரத்தில் அற்று அழிந்துபோகலாம். ஒருகப்பல் எவ்வளவுபிரமாண்டமாக இருந்தாலுஞ் சரி, சமுத்திரத்தில் செல்லும்போது தண்ணீர் இருபக்கங்களிலும் பிரிந்து கொடுக்கின்றது. சொற்பவேளையில் தண்ணீர்திரும்பவும் ஒன்றுபட்டுவிடுகிறது. கப்பல்போன அடையாளமே காணமுடியாதிருக்கிறது. எங்கள் பெயரும் ஒருஞாபகமாக மாத்திரமே இருக்கும். நாளாந்தசீவியச் சண்டையிலும், சந்தடியிலும் ஒவ்வொருவரும் தன்தன் சொந்தநன்மையையும், ஆறுதலையும், சொகுசையும் தேடுகிறார்கள். நாம் எண்ணுவதிலும் பார்க்க மனிதர்நம்மை விரைவில் மறந்துவிடுவார்கள். இவ்வுலக காரியங்களில் அவர்கள் ஈடுபட்டிருப்பதால் தங்கள் உதவியை ஆவலோடுநாடி அந்தரித்துக்கொண்டிருக்கும் கோடிக்கணக்கான ஆத்துமங்களின் விடுதலைக்காக அவர்கள்தங்கள் செபதபங்களின்பலனால் உதவிசெய்ய நினைப்பதில்லை. யோசிப்பதுமில்லை.

உத்தரிக்கிறஸ்தல ஆத்துமாக்களுக்கென விசேஷமாக ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கும்இந்தக்கார்த்திகைமாதத்தில் நாங்கள் எங்களைமறந்து, திருச்சபை எங்கள்வசம்கொடுத்துள்ள வசதிகளை எங்களாலான பிரயாசத்துடன் கையாண்டு, அந்தஆத்துமாக்களுக்கு உதவிசெய்வோமாக. நாம்செய்யும் உதவிகளை அந்தப்புண்ணிய ஆத்துமாக்கள் மறக்கப்போவதில்லை. நாம் இவ்வுலகைவிட்டு நீங்கும்காலம்வரும்போது, எங்கள்விடுதலைக்காக எண்ணிறந்தஆத்துமாக்கள் தேவசந்நிதானத்தில் எங்களுக்காகப் பரிந்துபேசக் காத்துக்கொண்டிருப்பார்கள். இந்த ஆறுதலான சிந்தனைமாத்திரமே நாம் அவர்களுக்கு உதவி செய்யும்படி எங்களைத் தூண்டிவிடப் போதுமல்லவா?

## அங்கும் இங்கும்

### நிம்மதியடையப் போவதில்லை

"சுதந்திரசட்டம் விவாதிக்கப்பட்ட அதேசமயத்தில் சிங்களம், தமிழ்இரண்டுக்கும் சமஅந்தஸ்து வழங்கப்படுமென்று உறுதிமொழி கூறப்பட்டது. ஆனால், இன்று நிகழ்வதென்ன? அரசாங்கசேவையிலிருந்து கடைசித்தமிழன் வெளியேற்றப்படும்வரை அரசாங்கம் நிம்மதியடையப் போவதில்லை. தற்போதைய அரசாங்கத்தின் உறுதிமொழிகள்எதையும் நாம் ஏற்கமுடியாதென்பதையே இந்த நடவடிக்கைகள் தட்டிக்காட்டுகின்றன."

**திரு. சி. சுந்தரலிங்கம்,**
வவுனியா, எம். பி.

### புத்தபிக்குவும் கம்யூனிஸ்த கட்சியும்

"பாராளுமன்ற முறையின் நீண்டநாள் சரித்திரத்திலே அரசாங்ககட்சி, எதிர்க்கட்சியென்ற இருகோஷ்டிகளே உண்டு. ஆனால், இலங்கைக் கம்யூனிஸ்தகட்சி ஒருநூதனமான கொள்கையைக் கடைப்பிடித்துள்ளது. அரசாங்ககட்சியிலும் அதுசேரவில்லை. இடதுசாரிக்கட்சியிலும் அதுசேரவில்லை. தாங்கள் என்னதான்செய்கிறோமென்பது கம்யூனிஸ்தகட்சியினருக்கே தெரியவில்லை. இப்பே[illegible] இக்கட்சி நாட்டிற்கு ஒருபுதிராக இருக்கிறது."

**கனம்.**
**அப்புகொடை சித்தானந்ததேரோ.**

### எப்போது சுபீட்சம் காணலாம்?

"பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்த (சிங்களவராகிய) நீங்கள் உங்கள்இனத்தில் கொண்டுள்ளபற்று நல்லது. ஆனால், அதுவகுப்புவாதத்தைக் கிளப்பி நாட்டின் ஐக்கியத்தையும், அந்நியோன்னியத்தையும் அழிக்குமானால் அதுவேண்டியதில்லை. நீங்கள் ஒவ்வொருவரும் இந்தநாட்டில் ஐக்கியத்தை நிலைநிறுத்தப் பெரிதுஉழைக்கவேண்டும். பல்வேறு சமூகங்களினிடையே நல்லெண்ணமும், ஒற்றுமையும் நிலவினால்தான் சுபீட்சத்தைக் காணலாம்."

**டக்றர் ஆனந்த குருகே,**
கல்விமந்திரிகாரியாலய உதவிக்காரியதரிசி

### அடக்கியாள எண்ணுமானால்

"பிரித்தானியர் இந்தநாட்டை ஆட்சிசெய்தபோது இந்நாட்டின் பிரசைகளுக்கு எல்லாவிதமான அடிப்படைஉரிமைகளையும் வழங்கிவந்தனர். தற்போதைய அரசியற்திட்டத்திலே இடம்பெற்றுள்ள அடிப்படைஉரிமைகள் சம்பந்தப்பட்ட சகலவிதிகளையும் பிரதமர் மீறிவிட்டார். ஜனநாயகவிதிகளையெல்லாம் மீறிவிட்டகாரணமாக இன்று தமிழர் பீதியுடன் வாழ்ந்துவருகின்றார்கள். தமிழரைஅடிமைப்படுத்திஅடக்கியாளஅரசாங்கம்எண்ணுமாயின் அதுபெரும் ஆபத்திலேயே போய்முடியும். பிரித்தானியஆட்சி சிங்களஆட்சியாக மாறிவிட்டதென்று மனப்பால் குடிக்கவேண்டாம்."

**திரு. சி. சுந்தரலிங்கம்,**
வவுனியா, எம். பி.

### தமிழ்ப்பிரதேசம் பறிபோகாமல்

"தமிழராகிய நாம்அனைவரும் தமிழில்பேசவேண்டும். தமிழில்எழுதவேண்டும். நம்மிடம் இத்தகையநிலை ஏற்படாதவரை தமிழ்மொழிக்குச் சமஅந்தஸ்துவேண்டுமென நாம்போராடுவதாலோ அன்றேல் தமிழுக்கு அரசியல் சட்டத்தில் இடம்பெறுவதாலோ எவ்விதபயனுமில்லை. யாழ்ப்பாணக் குடாநாட்டில் இடமின்றித் தவிக்கும்மக்கள் கிழக்குமாகாணத்திலுள்ள திரிகோணமலை, மட்டக்களப்புப் பிரதேசங்களில் குடியேறித் தமிழ்ப்பிரதேசம் பறிபோகாமல் பாதுகாத்து அங்கங்கே தமிழ்க் கொடியை நிலைநாட்டவேண்டும்."

**எஸ். இராசதுரை,**
மட்டக்களப்பு, எம். பி.

### விநோதமான ஜனநாயகம்

"இந்தநாட்டில் இன்றுநாங்கள் ஓர் விநோதமானஜனநாயகத்தைக்கொண்டிருக்கிறோம். இரகசியநோக்கங்களை மனதில்வைத்துக்கொண்டு மந்திரிஒருவர் ஒருமசோதாவைக் கொண்டுவந்தால் அந்தமந்திரிக்கு மரியாதைசெய்யுமுகமாகவோ, அன்றேல் அவருக்குப்பயந்தோ பிரதமர்அதற்குத் தமது சம்மதத்தைக் கொடுக்கிறார். ஏனைய மந்திரிகள் தங்களது சொந்தக்கருத்துகள் எவ்வாறிருந்தபோதிலும் தங்கள் விசுவாசத்தைப் பிரதமருக்குக் காட்டும்பொருட்டுத் தங்கள் சம்மதத்தையும் அதற்குக்கொடுக்கிறார்கள். இறுதியில் அதைப்பற்றிப் பொதுசனஅபிப்பிராயம் எப்படியிருப்பினும் பாராளுமன்ற அரசாங்ககுழுவும் அதை நிறைவேற்றிவிடுகிறது."

**திரு. பி. பி. விக்கிரமாராச்சி,**
அ. இ. நொந்தாரிஸ்மார் சங்கதலைவர்

### துரோகஞ் செய்துவிட்டார்கள்

"சமசமாஜ கட்சி இலங்கையின் தேசிய பாஷைக் கொள்கையில் ஸ்திரமான ஒருவழியைப் பின்பற்றி வருகிறது. சிங்களத்துக்கும், தமிழுக்கும் சமஅந்தஸ்துப் பெறுவதற்காகப் பாடுபடுவதே எங்கள் தீர்மானம. பாஷைப் பிரச்சினை சம்பந்தமாகப் பெரிதும் ஆபத்தான கட்டங்கள் குறுக்கிட்டுங் கூட நாங்கள் தளரவில்லை. வடஇலங்கையில் ஒருகுரலிலும், தென்னிலங்கையில் இன்னொருகுரலிலும் நாங்கள் பேசியது கிடையாது. தனிச்சிங்கள சட்டத்தைஇயற்றிய பிரதமர்பண்டாரநாயகாவை இன்று தமிழரின்முக்கிய நண்பனாக நாங்கள்கருதியதும் கிடையாது. கம்யூனிஸ்த கட்சியினரோ நெருக்கடியானவேளையில் பின்வாங்கித் தமிழரின் சீவாதாரமான நலன்களுக்குத் துரோகஞ்செய்துவிட்டார்கள்."

**டக்றர் கொல்வின் ஆர். டி. சில்வா**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவீன முறையான
## சரித்திர பாடப்புத்தகம்

தற்காலப் படிப்பித்தல் விதிமுறைகளுக்கு ஏற்க அரசியல், சமூகம், பொருளாதாரம், சமயம், கல்வி, போக்குவரவு என்பவற்றைக் குறித்து முறையாக விளக்கும் மாணவருக்கேற்ற நூல் இதோ! வெளிவந்துவிட்டது. இலங்கையும் உலகமும்

ஆக்கியோன்: வித்துவான் அ. சந்தியாப்பிள்ளை.

(1) மாணவர் சரித்திரக்காட்சி 6-ம் வகுப்பு ரூ. 2-00
(வித்தியாபகுதியினரால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.)

(2) மாணவர் சரித்திரக்காட்சி 7-ம் வகுப்பு ரூ. 2-00

கிடைக்குமிடங்கள்:

ஸ்ரீலங்கா புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
சஞ்சூசை மாமுனிவர் அச்சகம், யாழ்ப்பாணம்.

— குறிப்பு: தொகையாக எடுப்போருக்கு விசேஷ கழிவுண்டு. —


# திரிகோணமலை மேற்றிராசன ஐக்கியசங்க மகாநாடு

இம்மகாநாடு இவ்வாண்டு திரிகோணமலை, சின்னக்கடை, பரிசுத்த குவாடலூப்மாதா ஆலயத்தில் நடைபெற்றது. ஆரம்பமுதத்தினங்களிலும் வண. ஜே. டபிள்யு. லாங், வண. எவ். பி. பொண்டாஸ், வண. டபிள்யு. எச். மக்னேயர், வண. ஜோர்ஜ் ஈ. எல். வம்பேக், வண. ரி. செல்வராஜ், வண. றோபேட் லூக்காஸ்எனும் குருப்பிரசாதிகளால் ஆங்கிலத்திலும், தமிழிலும் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன.

ஐப்பசித் திங்கள் 27-ந் திகதி ஞாயிறன்றுகாலை மகாவந். இராசகுரவர் இக்னேஷஸ் கிளெனி ஆண்டவரவர்களால் திவ்வியபூசை நிறைவேறியது. காலை 8மணிக்குப் பிரதிநிதிகளுக்குக் காலைப்போசனம் அளிக்கப்பட்டது.

காலை 9 மணியளவில் ஆண்டுமகாநாடு சென் பிரான்சிஸ் சேவியர் கலாசாலையில் திரு. யோசெவ் ஜே. டேவிட் அவர்கள் தலைமையில் நூற்றுக்கணக்கான பிரதிநிதிகள் கூடியசமூகத்தில் ஆரம்பமாகவே, மகாவந். மேற்றிராணி ஆண்டவர் பரிசுத்த பாப்பரசரின் ஆசிச்செய்தியை அளித்தார். அவர் தமதுநல்லுரையில் கத்தோலிக்கமக்களிடையே ஐக்கியம் நிலவ வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். கடந்த கூட்ட அறிக்கை, ஆண்டறிக்கை, கணக்கறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன. அதன் மேல் பின்வரும்பிரேரணைகள் ஏகமனதாக நிறைவேறின.

1. அரசாங்கம் கத்தோலிக்கபாடசாலைகளை எடுத்துக்கொள்ளும் முயற்சிகளைத் தி. மே. ஐ. சங்கம் பலமாக எதிர்க்கிறது. கத்தோலிக்கபெற்றோர் தம்பிள்ளைகளைக் கத்தோலிக்க பாடசாலைகட்கே அனுப்பவேண்டுமென்பது திருச்சபைச் சட்டத்தைமட்டும் பொறுத்ததல்ல. இயற்கைநியதியையும் சார்ந்ததெனலாம். கத்தோலிக்கரல்லாதபெற்றோர் தம்பிள்ளைகளைக் கத்தோலிக்கபாடசாலைகட்கு அனுப்புதல் அவர்களின் சுயவிருப்பத்தைப் பொறுத்தது.

2. மகாவந். மேற்றிராணியாண்டவர் அவர்களின் எண்ணப்படி, கத்தோலிக்கபாடசாலைகள் பேருக்காகவல்ல, உண்மையாகவே மேம்பட்டு விளங்கத்தக்கதாக அப்பாடசாலைகளின் ஆசிரியர்களும், மாணவர்களும் சமய சன்மார்க்கம், இயற்கைச் சன்மார்க்கம் ஆகியஇரண்டிலும் மேலானநிலையடைய எடுத்துக்கொள்ளும் முயற்சிகளை தி. மே. ஐ. சங்கம் ஆதரிக்கிறது.

3. பொதுசனவாழ்வு பல்வகைப்பட்ட ஊழல்கள் மலிந்து பாழாய்ப் போவதைப்பற்றி விசனப்படுவதுடன் கத்தோலிக்கர்யாவரும் இவற்றைத் தடுத்து நிறுத்தும்முயற்சியில்—முக்கியமாகக் லஞ்சம்பெறும் கொடிய வழக்கத்தை உடனடியாக அகற்றுவதில் ஆவன்புரியுமாறு தி. மே. ஐ. சங்கம் வேண்டிக்கொள்ளுகின்றது.

4. சமுதாய சீர்திருத்தம் என்ற தலைமறைவில் இலங்கைஅரசாங்கம் மேற்கொண்டுள்ள நெற்காணி மசோதாவைச் சட்டமாக்க எத்தனித்திருப்பதை இச்சங்கம்பலமாகஎதிர்க்கிறது.

5. தீர்க்கமான இத்தீர்மானத்தை மேலும் அலசிஆராய்ந்து உடனடியான நடபடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று இலங்கையின் சகலமேற்றிராசன ஐக்கியசங்கங்களையும், இலங்கையின் மத்தியகத்தோலிக்க ஐக்கியசங்கத்தையும் தி. மே. ஐ. சங்கம் வினயமாய்வேண்டித் தூண்டுகின்றது.

மேலும் அரசாங்கத்தின் இச்சூழ்ச்சி நிகழ்ச்சிகள் அகிலஇலங்கைக் கத்தோலிக்கமக்கள் மனதில் எத்தகைய திகிலையும், அவகடசந்தேக உணர்ச்சிகளையும் எழுப்பிவிடுகின்றன என்பதை இலங்கையின் மத்தியகத்தோலிக்க ஐக்கியசங்கம் பிரதமருக்கு எடுத்துக்காட்டி இடித்துரைக்குமாறு கோருகிறது.

6. உத்தேசநடைமுறையில் இருந்துவரும் சட்டப்பிரமாண கூறுகள் யாவற்றையும் துருவிஆராய்ந்து அவைகள் சுயேச்சைபெற்ற சனநாயகஆட்சிப் பிரசைகளின் அடிப்படையான உரிமைகள், சுயாதீனங்களை எவ்வாற்றானும் கட்டுப்படுத்தி இடக்குப்பண்ணுகின்றனவோ என்றுபார்க்கத் தி. மே. ஐ. சங்கம் அதிலிருந்தே விழிப்பாளர் காப்புக்குழுஒன்றை ஏற்படுத்துகிறது. சனநாயகஆட்சி விதிகட்குமாறான சட்டங்களை மேற்றிராசனம் எதிர்த்து வாதாடுமாறும், மறுசங்கங்களை உற்சாகப்படுத்துமாறும் விழிப்பாளர் காப்புக் குழுதான் கண்ணுறும் எல்லாத் தகராறுகளையும் ஒன்றும்தவிராமல் அவ்வப்போதே தி. மே. ஐ. சங்கத்திற்கு அறிவுறுத்துவது கடனாகும்.

அடுத்தஆண்டின் உத்தியோகஸ்தர்கள் பின்வருமாறு தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்: திரு. ஜோஸ். ஜே. டேவிட், உபதலைவர்கள்: திருவாளர்கள் எம். பெனடிக்ற், ஜே. தோமாஸ், எஸ். துரைநாயகம், காரியதரிசி: திரு. கே. எல். இராஜேந்திரம், உபகாரியதரிசி: திரு. எஸ். சவரிராஜா, தனாதிகாரி: திரு. எவ். ஆர். றுகல்.

ஈற்றில்மகாநாடு நன்றியுரையுடனும், செபத்துடனும் நிறைவெய்தியது.

அன்றுமாலை 5 மணியளவில் திரிகோணமலையின் இருபங்குகளிலுமிருந்து கத்தோலிக்க சேவையாளர்களும், கத்தோலிக்கரும் தத்தம் விருதுக்கொடிகளையேந்தியபடியே ஞானகீதங்கள் பாடிக்கொண்டு ஊர்வலமாகப் பெரிய மைதானத்தில அலங்கரிக்கிருந்த திருப்பீடத்திற்கண்மையில்வந்து அணிவகுத்துநின்றார்கள்; மகாவந். இராசகுரவருக்குத் தங்கள்விசுவாசபிரமாணிக்கத்தைத் தெரிவித்துப் பவனிவந்தார்கள். அதன்பின் சிவியச்செபமாலையும், பிரார்த்தனையும், திவ்வியநற்கருணை ஆசீர்வாதமும் நடைபெற்றதுடன் மகாநாட்டுநிகழ்ச்சிகள் நிறைவெய்தின.


## மரித்தோர் நினைவு

உத்தரிக்கிற ஆத்துமாக்கள் ஈடேற உதவும் செபங்கள், பிரார்த்தனை, மனவல்லயச் செபங்கள் அடங்கிய புத்தகம். ஒவ்வொரு குடும்பத்திலும் அவசியம் இருக்கவேண்டியது.

விலை சதம் 15. தபாற்கூலி சதம் 5.

❁

பொ. த. G. C. E. பரீட்சைக்கு உரியன.
### கும்பகர்ணன் வதைப்படலத்துக்கு வினாக்களும் விடைகளும்

விலை சதம் 60. தபாற்கூலி சதம் 10.

❁

### திருவிளையாடற்புராணம் வசனச்சுருக்கம்

செய்யுள்களின் பொருளும், வடமொழி அரும்பதங்களின் அகராதியும் சேர்ந்தது.

விலை சதம் 60. தபாற்கூலி சதம் 10.

❁

### செய்கைமுறைப் பூமிசாஸ்திரம்

மாணவரின் சுயமுயற்சியை விருத்திசெய்யும் முறையில் பயிற்சிகளும், விளக்கக்குறிப்புக்களும், குறிப்புப்படங்களும், வினாக்களும் அமைந்தன.

விலை ரூபா 2-50. தபாற்கூலி சதம் 35.

அர்ச். பிலோமினு அச்சகம்,
102, பெரியதெரு, யாழ்ப்பாணம்.


மட்டக்களப்பு
## தாண்டவன்வெளித் தபால்

கிறீஸ்து இராசா திருநாள்: மட்டக்களப்பு, தாண்டவன்வெளிப் பரிசுத்த வியாகுலமாதா கோவிற் பங்கில் சென்ற 3-11-57 ஞாயிறுவாரம் மிகவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது. திருநாளன்று 5-30 மணிக்கு முதற்பூசையும், 7 மணிக்குக் கட்டளைக்குரவர் வண. ஜோர்ஜ் ஈ. எல். வம்பேக் சுவாமியவர்களால் பாடற்பூசையும் நிறைவேறின. பி. ப. 6 மணிக்குக் கிறீஸ்துஇராசாவின் திருச்சுரூப சுற்றுப்பிரகாரம் நடைபெற்றது. அவ்வமயம் விசுவாசிகள் மெழுகுவர்த்திகள்ஏந்திச் செபமாலை, பிரார்த்தனை சொல்லித் தோத்திர கீதங்கள் பாடி ஆலயவீதியை வலம்வந்தனர். பின்னர் மாலையாராதனை பாடித் திவ்வியநற்கருணை ஆசீர்வாதம் அருளப்பட்டது. ஈற்றில் கிறீஸ்துஇராசாவின் திருச்சுரூப ஆசீர்வாதம் அளிக்கப்பட்டுத் திருநாள் இனிது நிறைவேறிற்று.

விசுவாசப் பரப்புதல் சபை ஞாயிறு விற்பனவு: 3-11-57 ஞாயிறுவாரம் இரண்டாம் பூசையின் பின் மிஷன்ஞாயிறுவிற்பனவு நடந்தேறியது. வேதசம்பந்தமான பொருட்கள், தித்திப்பான உணவுப் பொருட்கள், வீட்டுக்கு உபயோகமான பொருட்கள், நூதன விளையாட்டுச் சாமான்கள், சிறந்த கடதாசிப் பொருட்கள் ஆதியன பக்திச்சபைகளின் அயராத சேவையினால் நிறைவாகக் காணப்பட்டன. பங்குக் கிறீஸ்துவர்களின் அயராமுயற்சியினால்விற்பனவு அமோகவெற்றி ஈட்டியுள்ளது. பங்குக்குரவரின் விடாமுயற்சியினால் இம்முறையே முதன்முறையாகப் பங்கில் மிஷன்ஞாயிறு விற்பனவு தொடங்கியுள்ளதுஎன்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

— நிருபர்

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

அச்சியந்திரத்தில்நெரிபட்ட என்விரல்களுக்குச் சத்திரவைத்தியம்செய்தடக்றர் இனிமேல் விரல்கள் வழங்குவது அரிதென்றபோது, "கைவிடப்பட்டவர்களின் பாதுகாவலராகிய அர்ச். யூதாததேயுவே! நீரே என்தஞ்சம்என்று அவரது பரிசுத்தபண்டமான நாடாவைக்கையில் கட்டிவிட்டேன். சதாசகாயமாதாவையும், அர்ச். அந்தோனியாரையும் மன்றாடினேன். இப்போது நல்லசுகம்பெற்று முன்போல் என்வேலையைச்செய்துவருகிறேன். நேர்த்தியின்படி இதைப்பிரசுரிக்கிறேன். இவர்களின்நாமம் புகழப்படுவதாக.

மட்டக்களப்பு எடிசன் ஒக்கஸ்

ஸ்ரீமதி
எஸ். செபமாலைமரியை
செல்வராணியின்
2-ம் வருட
## மரண ஞாபகம்



பிறப்பு: 3—5—1920 இறப்பு: 28—11—1955

ஸ்ரீமதி செபமாலைமரியை செல்வராணி மரணத் திரையில் மறைந்த 2-ம் வருடம் 28-11-57 இல் பூர்த்தியாகிறது. அன்றுதினம் சந்தியோகுமையோர் கோவிலில் ஓர் துக்கப் பாடற்பூசை நிறைவேறும். அவவின் ஆத்துமா இளைப்பாற்றிக்காக மன்றுடும்படி யாவரையும் தயவாய்க் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

"மிகவும் மதுரமான யேசுவே! தேவரீர் சிலுவையில் தொங்கியபோது அனுபவித்த அளவில்லாத கஸ்தியைப்பார்த்து இவ்வாத்துமத்தை இரட்சித்து உமது மோட்ச இராச்சியத்தின் செல்வ பாக்கியங்களுக்கும், நித்தியானந்த சந்தோஷத்திற்கும் பங்காளியாயிருக்கக் கிருபை செய்தருளும்."

மனைவியை இழந்து துயருறும்:
K. செபமாலை
(வடஇலங்கைப் பொலிஸ் அதிகாரி)
தாயையிழந்து வருந்தும் பிள்ளைகள்:
S. சேவியர், S. மேரி திரேஸ்,
S. மேரி கிறேஸ் பிறேமலா.
ஊர்காவற்றுறை.

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

யேசுநாதருடைய திருஇரக்கத்தினலும், சதாசகாயமாதாவின் விசேஷ வேண்டுதலாலும், அர்ச். அந்தோனியார், அர்ச். சவேரியார், அர்ச். பிலோமினம்மாள் இவர்களின் மன்றாட்டினாலும் எனது பேரப்பிள்ளைக்கு ஆறுமாதகாலமாகஇருந்த கடுமையானவருத்தம் குணமானதிற்கு எமதுநன்றியையும், ஸ்தோத்திரத்தையும் தெரிவிக்கின்றோம். மேலும் இவர்களின் இரக்கம் எங்கள்மத்தியில் என்றும் நிலைநிற்பதாக.

மிருசுவில் பக்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறைந்தவிலையிலே சுவிசேஷங்கள்

கடந்த 55வருடங்களிலே புதிய ஏற்பாட்டின் 521-வதுபதிப்பைச் சமீபத்திலே வத்திக்கான் அச்சககாரியாலயம் வழங்கியிருக்கின்றது. அதன் ஒவ்வோர்பதிப்பும் அர்ச். ஜெரோமின் பக்திச் சபையாலே பரிசீலனை செய்து பதிம்பிக்கப்படலாயிற்று. இந்தச் சபை மொன்சிஞ்ஞோர் டெல்லா சியெஸாவால் (15-ம்ஆசீர்வாதப்பர்) அடியிடப்பெற்றது தகுந்த மொழிபெயர்ப்புகள், பதிப்புகள் மூலம் பரிசுத்தசுவிசேஷத்தைப் பரப்புவதே இந்தச் சபையின் நோக்கமாகும். அதிகம்வறியவர்கள்தானும் விலைகொடுத்துவாங்கத்தக்கதாய் பத்துச்சதத்துக்கும் குறைந்தவிலையிலே சகலவகுப்பினருக்கும் இந்தப்பதிப்புகள் கிடைக்கக்கூடியதாய்ச்செய்ய அதுமுயன்றுவருகிறது.

## வத்திக்கானில் முஸ்லீம்ஸ்தானிகர்

வத்திக்கானிடமாக அனுப்பிவைக்கப்பட்ட ஈரான்நாட்டு (பார்சியா) ஸ்தானிகரான 74வயதுடைய ஜனாப் மகமத் சாரியத்அவர்கள் சமீபத்திலே காஸ்தெல் காண்டல்போவிலுள்ள பாப்பரசரின் கோடைகால மாளிகைசென்று தமது நியமனஅதிகார பத்திரங்களை அவரிடம் சமர்ப்பிக்கலாயினர். முன்புஇவர் இத்தாலியிலும், ருஷியாவிலும் ஈரானியஸ்தானிகராயிருந்தவர். அதற்குமுன் ஈரானிய வெளிநாட்டுவிவகார மந்திரி காரியாலயத்தில் ஓர்அதிகாரியாகவும், அசெர்பாய்ஜானின் கவர்னர்-ஜெனறலாயும்சேவைசெய்தவர். பரிசுத்த ஸ்தானத்தினிடமாகவுள்ள தனதுபிரதிநிதியை ஸ்தானிகர் வரிசையில் கொண்டுள்ள ஒரேயொருமுஸ்லீம்நாடு ஈரானே. பரிசுத்த ஸ்தானத்தினிடமாக ஓர்ஸ்தானிகரைக் கொண்டுள்ள மற்றஒரேயொரு மத்தியகிழக்குநாடு லெபனானாகும்.

## புரொட்டஸ்தாந்த கன்னிகாசபையும் பரிசுத்த தேவதாயாரும்

ஜேர்மனியிலே டாம்ஸ்ரட் நகரிலுள்ள ஓர்புரொட்டஸ்தாந்த மடத்தைச்சேர்ந்த கன்னியாஸ்திரிமார் பரிசுத்ததேவதாயாருக்கு விசேஷபக்திவணக்கம் செலுத்திவருகின்றனர். பெரும்பாலும் லுத்தேர்சபையினரான இவர்கள் கத்தோலிக்கஆச்சிரம வாழ்க்கைமுறைகள் பலவற்றையும் அனுட்டித்துவருகின்றனர். இந்தமடம் அர்ச். மரியாயின் சர்வகிறிஸ்துவ சபைகளுக்குப்பொதுவான கன்னியாஸ்திரிகள் சபையைச் சேர்ந்தது. ஜேர்மனியிலே ஆச்சிரமவாழ்க்கையில் முதலாவது புரொட்டஸ்தாந்தபரிசோதனை இதுவாகும். இந்தக்கன்னிகாசபை ஒழுங்குப்படி, ஒவ்வோர் கன்னியாஸ்திரியும் சபையில் சேரும்போது தான்தெரிந்துகொள்ளும் சொந்தப்பெயருக்குமுன் மேரிஎனும்பெயரையும் வைத்துக்கொள்ளவேண்டும். கத்தோலிக்கதிருச்சபையிலுள்ள அநேககன்னிகாசபைகளில் நடைபெறுவதுபோல இவர்களும் பரிசுத்தகன்னிமரியாயின் "சிறிய ஒவ்வீஸ்"செபத்தைப் பாடுவதற்காக நாளொன்றுக்கு ஏழுமுறை ஒன்றுகூடுகிறார்கள். "தேவனுடையதாயாரான மரியாயின் நேசத்துக்காகவும்," தேவசித்தத்துக்கு முற்றாகஅர்ப்பணஞ்செய்யும் பாதையிலே கவர்ந்திழுக்கப்படுவதாக உணர்ந்து, மரியாயுடன்சேர்ந்து "உம்முடையவார்த்தையின்படியே அமைச்சலின் "ஆம்" என்றவார்த்தையைச் சொல்ல ஆசிப்பதையிட்டுமே" மரியாயின்திருநாமத்தைத் தனதுமடம் தாங்கியிருக்கிறதென்று இந்தக்கன்னிகாசபை விளக்கங் கொடுக்கின்றது.

## லூர்துபதியும் வறியயாத்திரிகர்களும்

லூர்துதிருப்பதியிலே வறியயாத்திரிகர்களுக்கெனத் 900 பேரைஅடக்கக்கூடிய 'பட்டினம்' ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. வறியயாத்திரிகர்கள் அதிலே கூடியபட்சம் ஐந்துதினங்களுக்குத் தங்கஇடமும், போசனமும் இலவசமாக அருளப்படுவார்கள். ஸ்தாபனம்ஒன்றால் நடத்தப்படும் இந்தப்பட்டினம் பன்னிருஅழகானமண்டபங்களை அடக்கியுள்ளது. ஒவ்வோர்மண்டபமும் 72 பேருக்குப்போதிய படுக்கைவசதிகளையும், பாரிய ஓர்போசனசாலையையும், இருசிற்றாலயங்களையும், வாசிகசாலையையும் கொண்டுள்ளது. இந்தப்பட்டினம் சித்திரை 1-ந்திகதிமுதல் ஐப்பசி15-ந்திகதிவரை வறியயாத்திரிகர்கள் சகலருக்கும் திறந்துவைக்கப்பட்டிருக்கும். சனநெருக்கமான லூர்துபதிக்கப்பால் ஓர்அமைதியான இடத்திலே, அதிலிருந்து 15 நிமிஷத்தில் நடந்துபோகக்கூடிய தூரத்திலே இதுஅமைந்திருக்கிறது. அப்பதியின் நூற்றாண்டுவிழா நடந்தேறவிருக்கும் அடுத்த வருடத்திலே இது மாசிமாதநடுப்பகுதியிலிருந்து திறந்துவைக்கப்பட்டிருக்கும். மாரிகாலமாதங்களிலே இது ஞானவொடுக்கங்களுக்கும் பிறயாத்திரிகர்களுக்கும் திறந்துவிடப்பட்டிருக்கும்.

# கத்தோலிக்க சமாச்சாரம்

## ஆசீர்வாதப்பரின்அறையும் கல்லறையும்

மொண்தேகஸினோ ஆச்சிரமத்திலே அர்ச். ஆசீர்வாதப்பர் சஞ்சரித்திருந்த சிற்றறையும், 1,400 வருடங்களுக்குமுந்திய அவரது கல்லறையும் இரண்டாவதுஉலகயுத்தத்தில் பலத்தபீரங்கிக் குண்டுத்தாக்குதலுக்குப்பின்னும்சேதமடையாது அற்புதமாகக் காப்பாற்றப்பட்டு எஞ்சிநிலைத்திருக்கும் பகுதிகளென்று திரு. பிறெட் மக்டலானிஎன்பவரால் எழுதப்பெற்ற "கஸினோயுத்தம்"என்ற புதியபுத்தகம் எடுத்துக்கூறுகின்றது. அர்ச்சியசிட்டரின் பழுதுறாதசிற்றறையின் நிலைமையைக் காட்டிலும் இன்னும்அதிக ஆச்சரியமுண்டுபண்ணுவது யாதெனில், பிரமாண்டமான பீரங்கிவாயிலிருந்து தீரப்பட்டு அவரதுகல்லறையிலிருந்து ஒருஅடிதூரத்துள்விழுந்த ஓர்பாரியகுண்டு வெடிக்கத்தவறிய சம்பவமேயாகும். இத்தாலியிலுள்ள இந்த ஆசீர்வாதப்பர் சபைச் சந்நியாசஆச்சிரமம் ஒரேயொருஇரவில் பன்னிரண்டுமணித்தியால பீரங்கித்தாக்குதலுக்குள்ளாயிற்று. மறுநாள் மொண்தேகஸினோ மீது 254வெடிகுண்டுவிமானங்கள் 576தொன்நிறையான குண்டுகளைவீசின. ஜேர்மன்படைகள் இந்தஆச்சிரமத்தை ஆக்கிரமித்துவிட்டனவென்று நேசநாடுகளின் படைகள் தவறாகவிளங்கியே இவ்விதம்கடுமையாகக் குண்டுமாரிபொழிந்து அதனைத்தாக்கின.

## பேர்லின்நகர் மேற்றிராசனம்

ஜேர்மனியின் முன்னைநாள் தலைப்பட்டணமாகிய பேர்லின் நகர்மேற்றிராசனம் இரண்டாவது உலகயுத்தம் முடிந்தபோது, யுத்தத்தில் அதிகமாகச் சேதமடையாதனவாய் 30 கோவில்களையே கொண்டிருந்தது. ஆனால், தற்போது அம்மேற்றிராசனத்தில் 336கோவில்களும், சிற்றாலயங்களும் பாவனையில் இருந்துவருகின்றன. பேர்லின்நகர் மேற்றிராணியாரான ஜூலியஸ் டயெப்னர்ஆண்டவரே இந்தப்புள்ளிவிபரத்தைக் கொடுத்திருக்கிறார். இரண்டாவதுஉலகயுத்தத்தின் ஆரம்பத்திலே அம்மேற்றிராசனத்தில் 278கோவில்களே இருந்தன. தற்போதுள்ள 336கோவில்களிலும் சுதந்திரமேற்குபேர்லின் நகரில் 150கோவில்களும், சோவியற்கிழக்கு பேர்லின்நகரில் 38 கோவில்களும் இருந்துவருகின்றன. கம்யூனிஸ்த கிழக்குஜேர்மனியிலே 127கோவில்கள்இருக்கின்றன. பேர்லின்நகர் மேற்றிராசனத்தில்6,05,512கத்தோலிக்கர் இருந்துவருகின்றனர். இவர்களில்அதிகமானோர் கிழக்கும், மேற்குமாகப் பிரிக்கப்பட்டுள்ள பேர்லின்நகரிலேயே வசிக்கின்றனர். இன்று ஜேர்மன்நகரங்களிலெல்லாம் பேர்லின்நகரிலேயே மிகப்பெருந்தொகையானகத்தோலிக்ககோவில்கள் இருக்கின்றன.

## சர்வதேச மரியாயின்மகாநாடு

லூர்துதிருப்பதியிலே மரியாயின் பத்தாவது சர்வதேசமகாநாடு வருகிற 1958-ம் ஆண்டு புரட்டாசி10-ந்திகதிமுதல் 17-ந்திகதிவரையிலே நடைபெறவிருப்பதானது, தேவதாயார் அர்ச். பெர்னதேத்அம்மாளுக்குக் காட்சிகள்அருளிய நூற்றாண்டுவிழாவருடத்தில் ஓர்மகாசம்பவமாய்த் திகழவிருக்கிறது. அப்போது 400குருவிற்பன்னர்கள் "தேவனுடைய தாயாரைப்பற்றிச் சாதாரணகத்தோலிக்கர் என்னஅறிந்திருக்கவேண்டும்" என்பதுபற்றிய தெளிவான ஓர்அறிக்கையை நிர்மாணிப்பதற்காக மரியாயைப் பற்றிய திருச்சபையின்போதனையைஆராய்ச்சிசெய்வார்களென்று ரோமாபுரியிலுள்ள சர்வதேச மரியாயின்கழகதலைவரான வண. சாள்ஸ் பலிக்சுவாமியார் தெரிவித்திருக்கின்றார். இக்காலங்களிலே கன்னிமரியம்மாள்சம்பந்தமாய் இருவிசுவாசசத்தியங்கள்—மாசில்லாமல்உற்பவித்ததும் (1854), மோட்சத்துக்கு ஆரோபணமானதும் (1954)—பிரகடனஞ்செய்யப் பட்டிருக்கின்றன என்பதையும், ஆனால், இரண்டு—மாதாவின் தெய்வீகத்தாய்மையும், கன்னிமைத்துவமும்—புராதனமானவைஎன்பதையும் இந்த வேளைஅவர் ஞாபகத்துக்குக் கொண்டுவந்திருக்கின்றார். லூர்துபதியின் நூற்றாண்டுயூபிலி வருடத்தில் அங்குநிகழவிருக்கும் மகாவிசேஷப்பட்ட வைபவம் ஒன்றில்—அநேகமாய்ச் சர்வதேச மரியாயின்மகாநாட்டில் தலைமை தாங்குமாறு பரிசுத்தபாப்பரசர் தமதுபிரதிநிதியாகக் கருதினால் ஆண்டவர்ஒருவரை அனுப்பிவைப்பார். லூர்துபதியில் சமூகமாயிருக்கும் யாத்திரிகர்களுக்கு வானொலிமூலம் ஓர்சொற்பொழிவு நிகழ்த்துவார். ஆனால், திகதியும், விஷயமும் இன்னுமே அறிவிக்கப்படவில்லை. அத்திருப்பதியிலே கருதினால் ஆண்டவர் ஒருவர் பாடற்பூசைநிறைவேற்றும் ஒவ்வோர்முறையும், காட்சிகள் அருளப்பெற்ற திகதிகளிலும் பாப்பரசரின்ஆசீர்வாதம் வழங்கப்படும்.

## பாட்டியும் திவ்வியபூசையும்

பவேரியாவிலே திருப்பாடுகளின் நாடகத்துக்குப் பேர்போன ஒபறம்மார்கோஎனும் கிராமத்தில் புறோ எலிசபேத் றெயின்டின் என்ற ஓர்விருத்தாப்பியபாட்டி இருந்துவருகின்றாள். மனதுக்கெட்டிய காலமுதல் தினமும் இவள் திவ்வியபூசைகண்டு வந்திருக்கிறாள். சமீபத்திலே இவள் தனது 101-வதுபிறந்த பெருநாளைக் கொண்டாடியபோது வழமைபோல அன்று காலை 5மணிப்பூசைகண்டு அந்தச் சுபநாளைத் தொடங்கினாள். இவளுக்கு 27பேரப்பிள்ளைகளும், 39பீட்டப்பிள்ளைகளும், 3கோப்பாட்டப்பிள்ளைகளும் இருக்கின்றார்கள்.

## போலாந்தும் திருச்சபைச்சொத்துகளும்

போலிஷ் கம்யூனிஸ்தஅரசாங்கம் 1950-ம்ஆண்டு பறிமுதலாக்கிய திருச்சபையின் காணிகளிலும், சொத்துகளிலும் ஒருபகுதியை அதற்குத்திரும்பக் கொடுக்குமுகமாகப் போலாந்திலுள்ள சந்நியாசஆச்சிரமங்கள் முன்னர் கொண்டிருந்த காணிகளிலே பன்னிருஏக்கரை வைத்துக்கொள்ளப் போலிஷ்விவசாயமந்திரி காரியாலயம் சட்டம்ஒன்றின்மூலம் அனுமதியளித்திருக்கிறது. 1950-ம் ஆண்டின்சட்டத்தை அழித்துவிடுமாறு போலிஷ்மேற்றிராணிமார் கேட்டுக்கொண்டதன்மேல் திருச்சபையும், அரசாங்கமும் கலந்துபேசியதன் விளைவாகவே இந்தப்புதியஏற்பாடு செய்யப்படலாயிற்று. பொதுவிலே திருச்சபைக்குரிய கமநிலங்களை அதனிடம் திரும்பவும்கையளித்துவிட அரசாங்கம் மறுக்கின்றது. ஆனால், திருச்சபைக்கோ அன்றேல் தனிப்படக்குருமாருக்கோ சொந்தமான கட்டடங்களையும், உள்ளபடியே பிரத்தியேகமான சொந்தக்காணிகளையும் அது திரும்பவும் கொடுக்கவிருக்கின்றது. இனிமேல் நடத்தவிருக்கும் சமரசப்பேச்சுகளின் விளைவாக இனிமேலும்காணிகள் திரும்பக் கொடுபடுமென்று மேற்றிராணிமார் நம்பிக்கை தெரிவித்திருக்கின்றார்கள்.

---

உளமே உலகம்; அதுதானே மோட்சத்தை நரகமாக்கவும், நரகத்தை மோட்சமாக்கவும் வல்லது.

—மில்டன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கார்த்திகை மாதம்

**உத்தரிக்கிறஸ்தல ஆத்துமாக்களுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட மாதம்**

**பொதுக்கருத்து:** மக்கள் அடிக்கடி மரணத்தைப்பற்றிச் சிந்தித்துத் தங்களை நன்மரணத்துக்கு ஆயத்தப் படுத்திக்கொள்ளும்படியாக வேண்டிக்கொள்வது.

**வேதபோதககருத்து:** பிலிப்பைன் தீவிலுள்ள இளைஞரிடையே வேதபோதகஅழைத்தல் அதிகரிக்கும்படியாக மன்றாடிக்கொள்வது.

சத்தியவேத
பாதுகாவலன்

1957-ம் ஆண்டு
கார்த்திகைமாதம் 14-ந் திகதி

## யாழ்ப்பாண நகரசபை

யாழ்ப்பாண நகரசபைத்தேர்தல் மற்றுமோர்தரம் சுழன்றுகொண்டு இதோவருகின்றது. நகரின் வட்டாரங்களிலே ஒன்று நீங்கலாக ஏனையபதினான்கு வட்டாரங்களுக்குமாக 43 பேர் அபேட்சகர்களாக முன்வந்து போட்டியிடுகின்றார்கள். இவர்களிலே தக்கார், தகவிலர் யார் என்பதை அந்தந்தவட்டாரத்தில் அடங்கியுள்ளவாக்காளர்கள் நன்கு ஆராய்ந்துபார்த்துத் தகுதியானவர்களையே தெரிவுசெய்வது அவர்கள்மேற்சுமந்த பாரமானகடமையாகும். ஏனெனில், அவர்கள் தெரிவுசெய்யும் பிரதிநிதிகளைக்கொண்டதே யாழ்ப்பாணநகரசபை. இலங்கையின் பிரதமநகரசபைகளில் ஒன்றாக நிலவும் நமதுநகரசபைக்கு- இலங்கைத்தமிழ்மக்களின் தலைபிடமாகத்திகழும் யாழ்ப்பாணநகரசபைக்கு வாக்காளர்ஒவ்வொருவரும் பொறுப்புணர்ச்சிவாய்ந்த —அனுபவத்திலோ, ஆற்றலிலோ, ஒழுக்கத்திலோ, ஒத்துழைப்பதிலோ, இடம் பொருள் ஏவலிலோ தகுதிவாய்ந்த பிரதிநிதிகளைத் தெரிவுசெய்துஅனுப்பவேண்டும். பொதுவாக நகர்வாசிகள் அனைவரினதும், சிறப்பாகத் தத்தம்வட்டாரங்களினதும் வாழ்க்கையைச் சுபீட்சமாக்கச்செய்யும் ஆக்கவேலைகளிலே சபைவருமானத்தில் ஒவ்வோர் சதமும் செலவுசெய்யப்படுவதை ஆதரிக்கும் அபேட்சகர்களையே வாக்காளர்கள் ஆதரித்து, அவர்களுக்குத் தங்கள்வாக்குகளை அளிக்கவேண்டும். நகரசபைநிர்வாகத்தை ஊழல்நிறைந்த நிர்வாகமாக்கக்கூடிய — பிறர் அவமதிக்கத்தக்க நிர்வாகமாக்கக்கூடிய — வட்டாரவாசிகளின் நயசுகத்தைஅல்ல, ஆனல், தங்கள் சுயநலத்தையே நாடக்கூடிய பேர்களை வாக்காளர்கள் தெரிவுசெய்து அனுப்புவார்களாயின் இதுசெய்யல் யானை தன்தலையில் தானே மண்ணைவாரியிறைத்தது போன்ற விபரீதசெயலாகவே முடியும். நகரசபைவிஷயத்தில் வாக்காளர்கள் அக்கறைசெலுத்தாவிடின் நகரின்நிலைமை மோசமடையும். அதனல் நகர்வாசிகள் தான் கஷ்டமடையவேண்டிவரும். நகரிலே வீடமைப்பு, குடிதண்ணீர்விநியோகம், சுகாதாரம்முதலாம் பிரச்சினைகளெல்லாம் விரைவிலே தீர்க்கப்படவேண்டும். கைலஞ்சமென்றகூச்சலெழாமல், யாதொன்றும் கவனிக்கிறார்களில்லையென்ற குமுறலெழாமல், மற்றுஞ்சீர்கேடுகள் பற்றிய முறையீடெழாமல், "யாழ்ப்பாண நகரசபை தனது நிர்வாகத்தில் முழுக்கமுழுக்கத் தோல்வியடைந்துவிட்ட" தென்று இழிவாகக்கூற இடமெழாமல் நகரசபைநிர்வாகத்தைச் செவ்விதேகொண்டுநடத்தக்கூடிய சீரிய பிரதிநிதிகளையே தெரிவுசெய்யவேண்டுமென்ற சிந்தனையில்லாது, தேர்தல்சம்பந்தமாய் நேர்மையாக ஆர்வங்காண்பியாது, இராமன் ஆண்டாலென்ன, இராவணன் ஆண்டாலென்ன, கூடவந்த குரங்கினம்ஆண்டாலென்னவென்று வாக்காளர்கள் வாளாவிருந்துவிடின் யாழ்ப்பாண நகரசபை தான்முன்னர்அடைந்திருந்த பெருமையை இழந்து சிறுமையேஅடையும். தமிழர்களின் நிர்வாகத்திறமை இதுதானென்றுசொல்லிப் பிறர்நகையாடவேண்டிவரும். நகரசபைத் தேர்தல்விஷயமாய் வரியிறுப்போர்சங்கம்இச்சந்தர்ப்பத்திலே எடுத்துவரும் முயற்சியையும் காண்பித்துவரும் விழிப்புணர்ச்சியையும் நாம் பெரிதும்பாராட்டுகின்றோம்.

### ஆங்கிலத்திலும் பதிலளிக்கவேண்டும்

சனப்பிரதிநிதிகள்சபையிலே சென்ற 8-ந்திகதி கேட்கப்பட்ட ஒருகேள்விக்குப் போக்குவரத்துமந்திரியின் பாராளுமன்றக்காரியதரிசி திரு. ஹென்றி அபெவிக்கிரம சிங்களத்தில்மாத்திரம் பதில்அளித்துவிட்டு அமர்ந்தார். அப்போது திரு.சி. சுந்தரலிங்கம்அவர்கள் எழுந்து,பதிலின் ஆங்கிலமொழிபெயர்ப்புத் தெளிவற்றதும், தப்பானதுமாய் இருப்பதால் மந்திரிகள் ஆங்கிலத்திலும் பதிலளிக்கவேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். திரு. சி. வன்னியசிங்கம்எழுந்து, அரசாங்கத்தின்கொள்கையைச் சகலரும் சரிவரத் தெரிந்துகொள்ளவேண்டியிருப்பதால் தங்களிடம் கேட்கப்படும் கேள்விகளுக்கு மந்திரிகள் ஆங்கிலத்திலும் பதிலளிக்கவேண்டுமெனக் கூறிநின்றார். அதன்மேல் சபாநாயகரின் வேண்டுகோளுக்கிசைந்து திரு. அபெவிக்கிரம தனது பதிலை ஆங்கிலத்திலும் எடுத்துரைத்தார்.

### கூட்டுறவுப்பயிற்சிக் கலாசாலை

யாழ்ப்பாணம், கூட்டுறவுப்பயிற்சிக் கலாசாலையிலே கூட்டுறவுப்பணியாளர் தராதரப்பரீட்சைக்கென்று மூன்று மாதகாலப் பயிற்சியளிக்கப்படவிருக்கிறது. விண்ணப்பப்பத்திரம் நிகழும் 22-11-57 வெள்ளிக்கிழமைக்குமுன் அதற்குரிய பத்திரத்திலே கலாசாலைக்கு அனுப்பப்படவேண்டும்.

### பாடசாலைவசதிக் கட்டணம்

கல்விமந்திரியின் புதியவிதிகள் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தைப்பெறுமானல் பாடசாலைப்பிள்ளைகள் வசதிக்கட்டணமாகக் கூடியபட்சம் ஐந்துரூபாதான் கட்டவேண்டிவரும். கல்லூரி வகுப்புகளிலும், சிரேஷ்டஉயர்தர வகுப்புகளிலும் மாதம்ஒன்றுக்கு 5 ரூபாவுக்குமேலும், கனிஷ்ட உயர்தர வகுப்புகளில் 3 ரூபாவுக்குமேலும், ஆரம்பவகுப்புகளில் 2 ரூபாவுக்குமேலும் எந்தப்பாடசாலையும் வசதிக்கட்டணமாக அறவிடமுடியாதெனக் கல்விமந்திரி முடிவுசெய்திருக்கின்றார்.

## சந்நியாச வைர யூபிலி

யாழ்ப்பாணம், சம்பத்திரிசியார்கல்லூரிஅதிபராக நெடுங்காலம் பிரஸ்தாபம்பெற்று விளங்கியிருந்தவரும், தற்போது கண்டியிலே அம்பிற்றியாவிலுள்ள லங்காமாதா தேசியகுருமடத்தில் ஆத்மீகதலைவராயும், லத்தீன் ஆசிரியராயும் கடமையாற்றிவருகிறவருமான வண. சாள்ஸ் எஸ். மத்தியூஸ்சுவாமியவர்கள் நிகழும் கார்த்திகைமாதம் 1-ந்திகதியன்று தமது சந்நியாசவைரயூபிலி விழாவைக்கொண்டாடும் பெரும் பாக்கியத்தைப் பெறலாயினர். அன்றுகாலை வண. யூபிலிநாயகர் குருமடத்துச்சிற்றாலயத்திலே அத்திருமடத்தின் பேராசிரியகுரவர்களும், குருத்துவமாணவர்களும், மற்றும் குருப்பிரசாதிகளும்சமுகமாக யூபிலித்தோத்திர பூசை நிறைவேற்றினார். அச்சுபதருணம் இலங்கையிலுள்ள அமலோற்பவ மரியநாயகிசபைக் குருமாரின்சிரேஷ்டரான மகாவண. ஜி. போர்த்தின் சுவாமியவர்கள்செய்தருளிய மனவருட்சிக்குரிய பிரசங்கத்திலே யூபிலிநாயகர் ஆற்றிவந்துள்ள மகத்



தானதொண்டுகளை எடுத்துக் கூறி அவருக்குப் பரிசுத்தபாப்பரசர் அனுப்பிவைத்த சோபன வாழ்த்துத் தந்திச்செய்தியைப் படித்துக்காட்டினார்.

திவ்வியபூசையின்பின் யூபிலிநாயகர் எழுந்தேற்றஞ்செய்து வைக்கப்பெற்றிருந்த திவ்வியநற்கருணைத் திருச்சந்நிதானத்திலே, திரேவாஸ் நகரின் கௌரவமாத்திரையான மேற்றிராணியாராகும்மகாவந். ஆர்மன்ட் கிளோபா ஆண்டவர்சமுகத்திலே தமது சந்நியாச வாக்குத்தத்தங்களைப் புதுப்பித்தார். அதனைத்தொடர்ந்து "தெதேயும்" என்னும் தேவதோத்திரகீதம்பாடித் திவ்வியசற்பிரசாதஆசீர்வாதம் அருளப்படலாயிற்று.

பின்னர், அன்றுநடைபெற்ற யூபிலிவிருந்து உபசரணையிலே கண்டி மேற்றிராணியாரான மகாவந். பேர்ணட் றெஞ்ஞோ ஆண்டவரும் சமுகமாக, மகாவண. ஜி. போர்த்தின்சுவாமியவர்கள்பேசியபோது: இலங்கையிலே யூபிலிநாயகர்ஆற்றியுள்ள மாபெருந் தொண்டுகளுக்காக அமலோற்பவ மரியநாயகிசபை அதிசிரேஷ்டசுவாமிகள் பெயராலும், அச்சபை முழுவதின் பேராலும் அவருக்குநன்றித்துதி கூறினர். வண. மத்தியூஸ்சுவாமியார் எண்பதுவயது கண்டவராயிருந்தபோதிலும் இன்னுமே ஓர்இளங் குருவானவருக்குரிய ஊக்கத்துடன் தொண்டாற்றிவருகின்றார். ஏனையோர் கண்டு பாவிக்கத்தகுந்த சிறந்தஓர் உத்தமமாதிரிகையாய் விளங்குகின்றார். அவர் சம்பத்திரிசியார்கல்லூரி அதிபராயிருந்தபோது தமது மாணவர்களைக் கல்வியிலும், நல்லொழுக்கத்திலும், பண்பாட்டிலும் இனிதேபயிற்றியெடுத்த திறமைக்கு இலங்கைமுழுவதிலுமுள்ள அவரது எண்ணிறந்த அன்பர்கள் தகுந்த சான்றாவார்கள்என்றும் கூறிநின்றார்.

வண.மத்தியூஸ்சுவாமியார் இலங்கையிலே கத்தோலிக்கதிருச்சபையின் முன்னோடிகளில்ஒருவராவர்; அவருக்குள்ள பலஅனுபவங்கள் லங்காமாதாவின் தற்போதைய குருமடத்தை வெற்றிகரமாகக் கொண்டுநடத்துவதில் பேருதவியாயிருக்கின்றனஎன்று அக்குருமடத்தின் அதிபர் சுவாமியவர்கள் கூறலாயினர். மாணவர்களைப் பயிற்றியெடுப்பதிலே சுவாமியாருக்குள்ள திறமையிலிருந்து ஆசீர்வாதப்பர் சபைக் குருத்துவமாணவர்கள் நன்மையடையக் கூடியதாயிருப்பதையிட்டு வண. ஹைட்சுவாமியார் மகிழ்ச்சி தெரிவித்துநின்றார்.

யூபிலிநாயகர்எழுந்து உணர்ச்சி ததும்ப அளித்தபதிலிலே: தாம் ஆற்றக் கூடியதாயிருந்த சகலத்துக்குமாக எல்லாம்வல்ல இறைவனுக்கும், அமலோற்பவ மரியநாயகிசபைக்கும் தமதுநன்றியைத் தெரிவித்துக்கொண்டார். இந்த வைரயூபிலியானது நான் அச்சபையில் பிரவேசித்து, அச்சபைக்காகத் தொண்டாற்றிவந்து கண்ட யூபிலியாகும்; இப்போது நான் எப்படியிருக்கிறேனே அப்படியெல்லாமிருக்க என்னை ஆக்கிவைத்தது இச்சபையேயாகும்; விடுதிச்சாலை அதிபராகவோ, கல்லூரித்தலைவராகவோ, ஆகாயவிமானத்தாக்குதல் பாதுகாப்புக்கட்டுப்பாட்டு அதிகாரியாகவோ இருந்தபோதெல்லாம் ஓர் குருவானவரின் தொண்டுகளையே ஆற்றிவந்து நான்என்றைக்குமே பிரயாசப்பட்டுவந்தேன்; இந்தக்குருமடத்தில் படிக்கும் இளங் குருத்துவமாணவர்களைப் பயிற்றுவதாகிய எனது குருத்துவ அலுவல்களைப் பின்னருந் தொடர்ந்துநடத்துமாறு நான்அனுமதிக்கப்படுவேனென நம்புகின்றேன்என்று கூறிமுடித்தார். யூபிலிநாயகர் நீடூழிவாழ்க!

---

● பூமியிலிருந்து 2,16,420 மைல் தூரத்திலுள்ள சந்திரனை றொக்கெற் எனப்படும் ஓர்ஆகாயபாணம் போய்ச்சேர ஐந்துநாள் பிடிக்குமென்றும், ஆனல், வெள்ளிக்கிரகத்துக்குப்போக எட்டுமாதம்பிடிக்குமென்றும், ருஷிய வானவெளிவிஞ்ஞானியான ஏ. ஹெற்றர்ன் பெல்ற் சொல்லுகின்றாராம்.

● மனிதன் இல்லாமலே வெறும் றொக்கெற்ஒன்றை—அதாவது ஓர்ஆகாயபாணத்தை இன்றுதானும் சோவியற்ருஷியா சந்திரனுக்கும், செவ்வாய்க்கிரகத்துக்கும் அனுப்பிவைத்து அங்கு இறக்கமுடியுமென்று ருஷிய வானவெளி விஞ்ஞானியான பேராசிரியர் ஏ. ஹெற்றர்ன் பெல்ற் கூறியதாகச் "சிஸிவார்சோ"என்ற போலிஷ்பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது. ஆனல், ஓர்குறித்த இலக்கில்போய் இறங்க அதனை அனுப்புவது கஷ்டம் என்றும் அவர்கூறுகின்றாராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பல தேசங்களில்

## குருசேவின்காலமும் குறுகுமா ?

"சோவியற் கம்யூனிஸ்தகட்சித்தலைமைப்பீடத்தில் இன்று தனிப்பெருந் தலைவராகநிமிர்ந்துநிற்பவர் திரு. நிகிதா குருசேவ்என்பவரே; இவர்தான்விரும்பிய அதிகாரபதவியை அடைந்துவிட்டபோதிலும் தற்போதுஇவர் தனிமையாக விடப்பட்டிருக்கிறார்; ஆகவே, இவரைப் பலவித நெருக்கடிகள் அதிகந்தீவிரமாகச் சூழ்ந்துகொண்டுவருவதாகவே நான்சந்தேகிக்கிறேன்"னென்று ருஷியாவிலே முன்னர் அமெரிக்கஸ்தானிகராகப் பதவிவகித்திருந்தவரான திரு. ஜோர்ஜ் எவ். கெனன்என்பவர் லண்டன்நகரிலே சென்ற 11-ந்திகதியன்றிரவு பிரித்தானியவானொலியில் நிகழ்த்திய ஓர்சொற்பொழிவிலே கூறியிருக்கின்றார். இது ஒருஸ்திரமான சூழ்நிலையல்ல; அதிகாரிக்கு இந்தநிலை நீடிக்குமென்று நான் நம்பவில்லை; விரைவில்இவரும் கீழேதள்ளப்படுவாரென்றும் அவர் கூறலாயினர்.

## அமெரிக்க ஆகாயபாணங்கள்

"ருஷியா அனுப்பிய இரண்டாவது செயற்கைக்கிரகத்தின் அதேநிறையுள்ள பாரத்தை அதே தூரத்துக்கு—அதாவது, 1,000 ருத்தல் பாரத்தை 1,000 மைல் உயரத்துக்குக் கொண்டு செல்லும் 'ரொக்கெற்' ஆகாயபாணங்கள் அமெரிக்காவிடம் இருக்கின்றன; இராணுவதிட்டங்களில் தாமதம் ஏற்படுமென்ற கருத்தினாலேயே ஓர்செயற்கைக்கிரகத்தை அது அனுப்பவில்லை; ஆனால், சீக்கிரம் அப்படியானஒன்றை அனுப்புவதுதான் புத்திசாலித்தனமாகத் தோற்றுகிறது; யுத்தகாலத்திலே உபயோகிக்கத்தக்கமுறையில் கண்டத்துக்குக்கண்டம் பாய்ந்துதாக்கும் ஓர் குண்டு ருஷியாவிடம் இருக்குமென்று என்னால் நிச்சயமாகச் சொல்லமுடியாது; அமெரிக்கா, ருஷியா ஆகிய இருநாடுகளும் இத்தகைய ஆயுதங்களைக் கொண்டிருக்கும் காலத்தில் அதிகவித்தியாசம்இராது; அணு ஆயுதங்கள், பிறவகைஆயுதங்களைப் பொறுத்தவரை அமெரிக்கா முன்னணியிலேயே நிற்கிறது" என்று அமெரிக்க தேசப்பாதுகாப்புமந்திரி தெரிவித்திருப்பதாக வாஷிங்டனிலிருந்து சென்ற 10-திகதி அறிவிக்கப்பட்டிருக்கிறது.

* * *

● இத்தாலியிலே போட்சென் பட்டினத்தில் "பூகம்பங்களின் மாதா" எனப்பெயரிய தேவதாயாரின் புராதன படம் ஒன்று இருந்துவருகிறது. இற்றைக்கு நூறுவருடங்களின்முன் அப்பகுதியில் ஏற்பட்ட பயங்கர பூகம்பத்திலே அப்பட்டினவாசிகள் இந்தப் படத்தின்முன் பக்தி நம்பிக்கையுடன் செபஞ்செய்துகொண்டபோது அயலிலிருந்த பட்டினங்கள் பரிநாசமாக, அதுமாத்திரம் அழிவின்றிப் பாதுகாக்கப்படலாயிற்று.

● கடந்த 54 வருடங்களிலும் முதன்முறையாக ஜேர்மனியின் அரசாங்கதலைவர்ஒருவர் பரிசுத்த பாப்பரசரைத் தரிசிக்கவிருக்கின்றார். அதாவது, இம்மாதம் 27-ந் திகதியன்று சுதந்திர மேற்குஜேர்மனியின் ஜனாதிபதியும், ஓர் புரொட்டஸ்தாந்தருமான 72 வயதுடைய தியடோர் ஹென்ஸ் அவர்கள் அதிகாரபூர்வமாகப் பரிசுத்த பிதாவைச் சந்திக்கவிருக்கின்றார். ஜேர்மனியின் இரண்டாவது கெய்சர் வில்ஹெல்ம் சக்கிரவர்த்தி 1903-ம் ஆண்டு 13-ம் சிங்கராய பாப்பானவரைத் தரிசித்தபின் செய்யப்படும் முதலாவது தரிசனை இதுவாகும்.

## செயற்கைச்சந்திரனில் நாய்

ருஷியா வானவெளியில் மிதந்திவிட்ட இரண்டாவது செயற்கைச்சந்திரனிலே உலகத்தைச்சுற்றி வலம்வந்துகொண்டிருந்த 'லெய்கா' என்ற நாய் இறந்துவிட்டதாகச் சென்ற 9-ந்திகதி சனிக்கிழமை மஸ்கோவிலிருந்து அறிவிக்கப்பட்டதாக "யுனிதா"என்றஇத்தாலிய கம்யூனிஸ்தபத்திரிகை மறுநாள் 10-ந்திகதி செய்திவெளியிடலாயிற்று. ஆகாயவெளியிலே உலகத்தைச்சுற்றிவரும் அதிர்ஷ்டத்தைப் பெற்ற முதலாவதுபிராணியான 'லெய்கா' தனதுஉயிரைத் தியாகஞ்செய்தபோதினும் விஞ்ஞானத்துறையில் பல முக்கியமான தகவல்களைக் கொடுத்துதவியிருக்கிறது. அதன்மூலம் மனிதன் வெகுவிரைவிலே ஒருகிரகத்திலிருந்து மறுகிரகத்துக்குச்செல்ல வசதிஏற்படலாமென்று அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. இந்தநாயை உயிருடன்திரும்பவும் பூமிக்குக்கொண்டு வந்துவிடலாமென்றநம்பிக்கை கடைசிநேரம்வரை இருந்துவந்தது. ஆனால், இந்தஅதிர்ஷ்டம் கிட்டவில்லை. இதையிட்டு மஸ்கோவில் ஓரளவுகவலை காணப்படலாயிற்று.

* * *

● "கெடுபிடியுத்தம் மிகவும் சூடாகிக்கொண்டுவருவதை நாம்காண்கின்றோம்; ஆனால், உண்மையான யுத்தம் மூளுவது சாத்தியமென்று எனக்குத் தோற்றவில்லை"என அமெரிக்க, ஆசிய நாடுகளிலே இருமாதகாலம் சுற்றுப் பிரயாணஞ்செய்துவிட்டுச் சென்றசனிவாரம் மெல்போண்நகருக்குத் திரும்பிய ஆஸ்திரேலிய வெளிநாட்டுமந்திரியான திரு. ஆர். சி. கேஸி அபிப்பிராயம் தெரிவித்திருக்கின்றார்.

● அடுத்த பத்துவருடகாலத்துள் சந்திரனுக்குச்சென்று சேமமேதிரும்பி வருகின்ற முதலாவது ஆளுக்கு 50,000 பவுன் ரொக்கமாகப் பரிசளிப்பதாகப் "பீப்பிள்" என்ற ஞாயிறுவாரப்பத்திரிகை சென்ற 10-ந்திகதி தனது முதற்பக்கத்தில் கொட்டைஎழுத்துகளிலே பிரசித்தஞ் செய்திருப்பதாய் லண்டனிலிருந்து செய்திகிடைத்திருக்கிறது. இந்தப்போட்டியில் எந்தநாட்டுப்பிரஜையும் கலந்துகொள்ளலாமாம்.

● ஹங்கேரிய கம்யூனிஸ்த அரசாங்கம் குருமாருக்கென்று அங்கு பொயெக்கோயெல் எனுமிடத்திலே சிறைமுகாம் ஒன்றை அமைத்திருப்பதாகக் "காத்பிறெஸ்" என்ற ஆஸ்திரிய கத்தோலிக்க செய்திஸ்தாபனம் தெரிவித்திருக்கிறது. சென்றவருடம் ஐப்பசிமாதம் அங்குஉண்டான சுதந்திர எழுச்சிக்கலகத்தில் ஊக்கமாகக்கலந்துகொண்டார்களென்று குற்றஞ்சாட்டிக்கொள்ள இயலாதவர்களாய், ஆனால், கலகக்காரரில் பிரசித்தமாக அனுதாபங் கொண்டிருந்தார்களென்று அறியப்பெற்ற குருமாரே அதில் சிறைவைக்கப்பட்டிருக்கிறார்கள்.

● ஐக்கியஅமெரிக்கதேச ஆர்லிங்டன்நகரிலே பிரான்சீஸ்கன் சபையைச் சேர்ந்த சங். மேரியன்பிறதர் பாத்திமா செபமாலைப் பக்திஇயக்கத்தில் ஈடுபட்டுத் தீவிரமாக உழைத்துவருகின்றார். அவர் இரண்டாவது உலகயுத்தம்முடிந்ததுமுதல் இதுவரையிலே உலகமுழுவதிலும் வழங்குமாறு 1,50,000 செபமாலைகள்செய்து அனுப்பியிருக்கின்றார். இவர் கடந்தஐந்துவருடங்களிலும் ஐக்கியஅமெரிக்கதேசத்திலும், கனடாவிலும் சுற்றுப்பிரயாணஞ்செய்து பாத்திமாசொற்பொழிவுகள்நிகழ்த்தித்திரும்பியிருக்கின்றார்.

# தலைமை ஆசிரியர்களுக்கு அறிவித்தல்

1958-ம் ஆண்டிலே சகல கத்தோலிக்க பாடசாலைகளிலும் அனுசரிக்கப்படவேண்டிய பாடசாலைத் தவணைகள் கீழே குறிக்கப்பட்டிருக்கின்றன.

| | | | |
|---|---|---|---|
| 1-ந் தவணை | 7-1-58 | — | 27-3-58 |
| 2-ந் தவணை | 22-4-58 | — | 8-8-58 |
| 3-ந் தவணை | 2-9-58 | — | 19-12-58 |

தை 14; மாசி 3, 4; பங்குனி 5; வைகாசி 1, 2; ஆடி 29; கார்த்திகை 10, 25. இவை அரசாங்க விடுமுறை நாட்கள். ஆகையால், அத்தினங்களில் பாடசாலை நடைபெறக் கூடாது.

மாசி 19 — விபூதித்திருநாள்.
பங்குனி 10 — (9-ம் ஞாயிறுவாரம் ஆதலால்) பாப்பரசர் தினம்.
வைகாசி 15 — திவ்வியகர்த்தரின் ஆரோகணம்.
ஆனி 27 — ஆடி 4 மடு லீவு.
ஆடி 21 — (20-ம் ஞாயிறுவாரம் ஆதலால்) நம்மேற்றிராணி ஆண்டவர் தினம்.
ஆவணி 15 — தேவதாயாரின் மோட்சாரோபணம்.
கார்த்திகை 3 — (2-ம் ஞாயிறுவாரம் ஆதலால்) சகல ஆத்துமாக்கள் தினம்.
மார்கழி 8 — தேவதாயாரின் அமலோற்பவம்.

இவை எல்லாப் பாடசாலைகளுக்கும் விசேஷ விடுதலை நாட்களாகும்.

1958-ம் ஆண்டிற் தத்தம் பாடசாலைகளில் அனுசரிக்கப்படவிருக்கும் அத்தியாவசியமான விடுதலை நாட்கள் இருப்பின் அவற்றைக் குறித்து, காலதாமதமில்லாது கட்டளைச் சுவாமியாரின் கையொப்பத்துடன் அனுப்பிவைக்கும்படி தலைமை ஆசிரியர் எல்லோரும் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

**கவனிப்பு:**

(1) அவசிய காரணமாகப் பாடசாலை மூடுவதைப்பற்றி நமக்கு அனுப்பப்படும் கடிதங்கள் கட்டளைச் சுவாமியாரின் அங்கீகாரம் பெற்று அவருடாக அனுப்பப்படவேண்டும்.

(2) பிள்ளைகளின் வரவு குறைவு என்ற காரணத்தையொட்டிப் பாடசாலை மூடக்கூடாது.

(3) 1958-ம் ஆண்டுக்குரிய பாடசாலை நேரசூசிகள் 15-1-58-க்குப் பிந்தாமல், கட்டளைச் சுவாமியாருடாக நமக்கு அனுப்பப்படவேண்டும்.

(4) எந்த முகாந்திரத்தையிட்டும் மேலே கொடுக்கப்பட்ட பாடசாலைத் தவணைகளில் ஒருவித மாற்றமும் செய்யப்படலாகாது.

(5) விசேஷ காரணத்தையிட்டுப் பாடசாலை மூடப்பட வேண்டியிருப்பின், கட்டளைச் சுவாமியார் மூலம் முகாமைக்காரரின் அனுமதியை ஆகக்குறைந்தது மூன்று நாட்களுக்குமுன் பெற்றுக்கொள்ளவேண்டும்.

(6) பாடசாலைப் பிள்ளைகளுக்கு அளிக்கப்படும் இலவச உணவுப் பத்திரங்கள் ஒவ்வொரு மாதமும் 5-ந் திகதிக்குப் பிந்தாமல் நமக்கு அனுப்பப்பட வேண்டும். அவை 4 சத முத்திரை ஒட்டித் திறந்த உறையில் அனுப்பப்படலாம்.

(7) பரிசுத்த பாப்பரசர் தினத்தையும், நமது மேற்றிராணியாண்டவர் தினத்தையும் சிறப்பாகக் கொண்டாடுதல் விரும்பத்தகும்.

Jaffna, 13-11-57

**Philip Ponniah,**
*Gen. Manager, R. C. Schools*

---

● உலகில் அதிகம்கவர்ச்சிகரமானதும், அழகிய சித்திரவேலைப்பாடுகள் அமைந்ததுமான சிறைச்சாலை வத்திக்கான்சிறைச்சாலையாகும். ஆயினும், அது சில மறியற்காரரையே கொண்டிருக்கின்றது. சுமார் 800 குடிசனங்களை மேற்பார்வைசெய்வதும், பாப்பரசர்களால் ஆளப்படும் இராச்சியமுமாகிய வத்திக்கான் அரசாங்கத்தின் சொந்தப்பாவனைக்கென்றே அதுஇருந்துவருகிறது.

● சிறியபுஷ்பத்தின் தந்தையாரான லூயிஸ் மாட்டீன் என்றுவதுஒருநாள் அர்ச்சியசிட்டபட்டம் அருளப்படுவாராயின் சந்நியாச-கன்னிகா வாழ்க்கைக்கு அழைக்கப்படும்பிள்ளைகளின் பெற்றோருக்கெல்லாம் ஓர்உத்தமபாதுகாவலராய் இருந்துவருவாரென்று "லூயில் மாட்டீனது புதல்வியின்சீவியவரலாறு" எனும் நாமத்துடன் வெளிவந்துள்ள புத்தகம்ஒன்றில் தெளிவாகக் காண்பிக்கப்பட்டிருக்கிறது.

● ருஷியாவின் இரண்டாவது சந்திரனைக்காட்டிலும் பெரியஉபகிரகம் ஒன்றை வானவெளிக்கு அனுப்பும் விஷயமாய் அமெரிக்கஜனாதிபதி திட்டமிட்டுவருகிறாரென்றும், அது 600 மைல் உயரத்தில்பறந்து உலகைச்சுற்றி வருமென்றும், அதில்எலிகள், கினியாப்பன்றிகள், குரங்குகள்போன்ற மிருகங்கள் சவாரிசெய்யுமென்றும், இன்னும் நான்குமாதகாலத்தில் இந்த உபகிரகம் அனுப்பப்படலாமென்றும் "சிக்காகோ ரிறிபியூன்" என்ற பத்திரிகை கூறுகின்றது.

● சென்றவாரம் புதுடில்லியில் நடைபெற்ற செஞ்சிலுவை மகாநாட்டிலிருந்து சீனக்கம்யூனிஸ்த கோஷ்டியினரும், சோவியற்ருஷிய தூதுக்கோஷ்டியினரும் வெளியேறிவிடலாயினர். இந்தமகாநாட்டில் தேசியசீனாவைச்சேர்த்துக்கொள்ளப் படாதென்ற அவர்களின்கோரிக்கை தோல்வியடைந்ததைத்தொடர்ந்தே அவர்கள்வெளியேறினார்கள். அவர்களின்கோரிக்கை தோல்வியடையக்காரணம், அரசியல் அடிப்படையில் அதுஇருந்தமையே.

● சீனாவிலே அநேக வருடங்களாய் மிஷனரிமார் தொண்டாற்றினார்கள்; ஆனால், அருமையாக ஒருசில மனந் திரும்புதல்களுக்குமேல் பிறிதொன்றுமில்லை; இப்போதோ சுதந்திரசீனாவின் தலையிடமாகிய போர்மோசாவிலே ஏறக்குறைய ஓர்புதுமையென்று சொல்லக்கூடியவகையிலே சீனர்கள் ஆயிரமாயிரக்கணக்கில் மனந்திரும்பிக்கொண்டிருக்கிறார்களென்று அங்கு ஓர் மாசில்லாதஇருதயசபை மிஷனரியான வண. ஹெமிலான் ஹைவ்ற்சுவாமியார் கூறுகின்றார்.

● மலாய்நாட்டிலே பெருங்கெடுதிகளை உண்டுபண்ணிக் கொண்டிருக்கிற கம்யூனிஸ்தார்கள் அரசாங்கத்தினிடம் சரணடையத் தயாராகின்றனராம். மலாயாவின் உள்நாட்டுயுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருமாறு ஒரு நியாயமான உடன்பாட்டுக்கு வருவதுபற்றிச் சந்தித்துப்பேசத் தான்தயாராயிருப்பதாக மலாயாக் கம்யூனிஸ்தகட்சியின் காரியதரிசியான சின்பெங் மலாயா முதன்மந்திரிக்கு எழுதியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரலோகத்தின் சுவர்ன திறவுகோல்.

(சி. எஸ். நாயகம், ஸ்டேஷன்மாஸ்றர், கெமுபு — மலாயா)

(சென்றவாரத் தொடர்ச்சி)

பூவுலகிலுள்ள மானிடசென்மங்களாகிய நம்மெல்லோர்க்கும் இருவித நோய்பிணி உண்டு. ஒன்று, சரீரத்துக்கடுத்தது. மற்றது, ஆத்துமத்துக்கடுத்தது. ஆத்துமத்தைச் சார்ந்தது "பாவப்பிணி". நமதுசரீரத்தில் உண்டாகும்நோயை முற்றவிடாது நேரகாலத்தோடு வைத்தியரிடம்காட்டி வேண்டியசிகிச்சை செய்யாவிடின் மரணம்நிச்சயம். அதனூற்றான் "உன்வியாதியை ஆரம்பத்திலே தறி" என்று திவ்விய இஸ்பிரீத்துசாந்து சர்வேசுரன் வசனித்திருக்கிறார். நமது சரீரத்துக்கு உயிர் இருப்பதுபோல் ஆத்துமத்துக்கும் உயிர் உண்டு. சரீர உயிரைக்கொல்வது நமது தேகப்பிணி, ஆத்தும உயிரைக் கொல்வது நமது பாவப்பிணி. சரீரமரணம் அநித்தியம். ஆத்தும மரணமோ நித்தியமானது. நமது சரீரப்பிணி இருவகைப்படும். ஒன்று, "சாதாரண"பிணி. மற்றது, "மரணபத்துக் கேதுவான" பிணி. நாம் ஆரம்பத்திலே அசட்டைபண்ணுவோமானால், "சாதாரண பிணி" வலுப்பெற்று முற்றி "மரணபத்துக் கேதுவான" வில்லங்கத்தை உண்டுபண்ணி நம்மைக்கொல்லும்.

அதேபோல நமது ஆத்துமபிணியும் இருவகைப்படும். ஒன்று, "அற்ப பாவம்". மற்றது, "சாவானபாவம்". அற்பபாவத்தை நாம் ஆரம்பத்தில் அசட்டைபண்ணினால் நாளாவட்டத்திலே அது பலப்பட்டு முற்றிச் "சாவானபாவத்தில் கொண்டுபோய் விழ்த்திவிடும்," சாவானபாவம் நமது ஆத்தும உயிரைக் கொல்லும். நமது சரீரவியாதியைக் கூடியளவுதவிர்ப்பதற்கும், வந்தவியாதியைப் போக்கிக் குணமாக்குவதற்குமாக நாம் எவ்வளவோ கண்ணுங்கருத்துமாய் இருந்து வருகிறோம். எத்தகைய சிரமத்துக்கும், கஷ்டத்துக்கும், செலவுக்கும் நாம் பின்வாங்குவதில்லை. ஆனால், நமது ஆத்துமப்பிணியைப் போக்கவோ போதியமுயற்சி எடுப்பதில்லை. நமது ஆத்துமவைத்தியரான குருவானவர் பக்கத்திருந்தாலும் நம்மில் எத்தனையோபேர் அவரைப்பற்றிச் சிந்திப்பதுமில்லை, பறுவாய் பண்ணுவதுமில்லை. நமக்குத் தலையிடி, காய்ச்சல் ஏதாகிலும் வந்துவிட்டால் என்னவோ ஏதோ வென்று பயந்தவர்களாய் விடிந்தது தான்தாமதம் வைத்தியரிடம் போகிறோம். ஆனால், நமதுஆத்துமத்துக்கு வரும் வியாதியை நேரகாலத்துடன் நமது ஞானவைத்தியருக்குக் காட்டி அதைக்குணப்படுத்தவோ எவ்விதஅக்கறையும் எடுப்பதில்லை. எடுத்தாலும் ஏதோ கட்டாயத்துக்கும், கடமைக்குமாக எடுப்பதுபோல் நெளிவெடுத்துத் தான் ஏதோசெய்கிறோம்.

தினசரி எத்தனையோ ஆஸ்பத்திரியைப் பார்த்தாலும் காலையிலிருந்து மாலைவரை நோயாளரால் முற்றிகையிடப்பட்டவண்ணம் இருப்பதைக் காண்கிறோம். ஆனால், நமது ஞானப்பிணியைப் போக்கும்விஷயத்திலே இதற்கு நேர்விரோதமாய் நடந்துகொள்ளுகிறோம். வருடக்கடனைத் தீர்ப்பதற்குத்தானும் குருவானவர் அல்லது உபதேசியார் விடுவிடாக அலையவேண்டியிருக்கிறது. "ஏன் சுவாமியாரிடம் போய்ப் பாவசங்கீர்த்தனம் பண்ண வேண்டும்? நேரே ஆண்டவருக்கு நமதுபாவத்தைச்சொல்லி மன்னிப்புக் கேட்டால் என்ன?" என்று சிலர் சொல்லலாம். அவ்வாறாயின் இவர்கள் ஏன் ஆண்டவரிடம் தங்கள்பாவத்தைச் சொல்லவேண்டும்? சிந்தனையினாலும், வாக்கினாலும், கிரிகையினாலும் நாம் கட்டிக்கொள்ளும் பாவங்களையெல்லாம் அவர்தானே நன்கறிவாரே! ஆகவே, நாம் அவருக்குச் சொல்ல வேண்டிய அவசியம்இல்லையே, இவ்வாறு சொல்லுகிறவர்கள் தங்களுக்கு வரும் சரீரப்பிணியையும் நேரே ஆண்டவரிடஞ்சொல்லிக் குணமாக்காமல் மீண்டும்மீண்டும் விழுந்துகட்டி ஆஸ்பத்திரிக்கு ஏன் ஓடிப்போகவேண்டும்? வைத்தியரிடம் ஏன்போய்க் காட்ட வேண்டும்? விழலாக ஏன் பணத்தை இறைக்கவேண்டும்? ஆகவே, இவையெல்லாம் வீண் சாக்குப்போக்கேயன்றி வேறல்ல.

நமதுசரீரப்பிணிக்கு உலகவைத்தியரைப்போல், ஆத்துமபிணிக்குச் சர்வேசுரனல் ஏற்படுத்திய ஞானவைத்தியர் கத்தோலிக்க குருமாரே. அவர் ஏற்படுத்திய ஞானஅவுடதம் "பச்சாத்தாபம்" ஒன்றே. ஆதலால், நமது சரீரப்பிணியைப் போக்குவதற்கு வேண்டிய சிகிச்சை செய்யாவிடின், இவ்வுலகம் நமக்கு இல்லையென்பது எவ்வளவுநிச்சயமோ அதேபோன்று நமது ஆத்துமபிணியைப் போக்குவதற்கு நாம் வேண்டியமுயற்சி எடுக்காவிடின் நமக்கு அவ்வுலகம் (மோட்சம்) இல்லையென்பது நிச்சயம். சரீரப்பிணியைப்போல் நமது ஆத்துமமும் பாவப்பிணியால் அழுந்தி வீங்கித்தூங்கிப் புழுத்துநாறி நரகத்துக்கிரையாய் நித்தியமரணத்தை அடையுமென்பது சத்தியம்.

நிற்க, நாம் சரீர ஆரோக்கியமாய் வாழ்வதற்குச் சிலபல சுகாதாரவிதிகள் உண்டென்பதை நாமெல்லாம் நன்கு அறிவோம். அவற்றுள்ஒன்று, "தேகசுத்தி". தேகத்தை நாம் சுத்தமாக வைத்திருக்க வேண்டுமானல் என்ன செய்யவேண்டும்? தினமும் நீராடவேண்டும். நமதுஉடம்பிலே இயற்கையில் எப்பொழுதும் வியர்வை சுரந்தவண்ணமும், அழுக்குப் படிந்தவண்ணமுமாகவே இருக்கும். ஆகவே, இந்த அழுக்கையும், வியர்வையையும் போக்கத் தினமும்நீராடி நம்மைச் சுத்தமாக்கவேண்டும். ஒருநாள் நீராடாவிடின் உடலிலிருந்து நாற்றமெழத் தொட... விடுகிறது. இவ்விதநாற்றத்துடன் மனுஷருக்குமுன்போக நாம் கூச்சப்படுகிறோம். நமது சரீர்ஆரோக்கியத்துக்காகவும், நாம் நீராடவேண்டியது அவசியம். அன்றேல் நோய்களை வாங்கிக் கட்டுவோராவோம்.

அதேபோன்று நமது ஆத்துமத்திலும் பாவஅழுக்கு — வியர்வை படிவதும், சுரப்பதும்இயற்கை. அவைகளைப் போக்க நாம் தினமும்இல்லாவிடினும் கிழமைக்கு ஓர்தரம் — தவறினால் மாசத்துக்கு ஓர்தரமாகிலும் "பச்சாத்தாபம்" என்னும்அற்புதசலத்தில்நீராடி நம்மைக் கழுவிச் சுத்தமாக்காவிடில் நமது ஆத்துமசுகத்துக்குப் பெருங்கெடுதிகள் ஏற்படுமென்பது திண்ணம். பாவசீவியம் சீவித்துப் பாவஅழுக்குடன் இருக்கிறவர்கள் உலகில் தங்கள் ஆத்துமத்தைக்கெடுத்து நரகத்தையும் வாங்கிக்கட்டுவோராவார்கள். பாவ அழுக்குடன் மோட்சகரைசேர ஆசிப்பது, முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்டது போலாகும். ஏனெனில், "தீட்டுள்ளதும், அருவருப்பையும், பொய்யையும் நடப்பிக்கிறதுமாகியளதவும் அதில் (மோட்சத்தில்) பிரவேசிப்பதில்லை" (காட்சி. 21 : 27) என்பது தேவவாக்கு. பாவமானது தீட்டும், அருவருப்புமானது. இந்தத் தீட்டும், அருவருப்புமுடைய பாவிகள் மோட்சத்தை எட்டித்தானும்பார்க்க முடியாதவர்கள். அதனால், இவர்கள் ஆத்துமசுத்தி செய்யவேண்டும். இதற்கும் பச்சாத்தாபந்தான் ஒரேயொரு வழியாகும். இதன்மூலமாகவே நாம் பாவவிமோசனம் அடைந்து மோட்சகரை சேரவேண்டும். நாம் சரீர அழுக்கை நீரால் சுத்தப்படுத்துவது போல், பாவஅழுக்கைப் பச்சாத்தாபத்தால் சுத்தப்படுத்தவேண்டும்.

சுகாதாரவிதியிலே இன்னொன்று நமதுவீட்டுச்சுத்தம். வீடும், வளவும் எப்பொழுதும் நல்ல சுத்தமாயிருக்க வேண்டியது நம்முடைய தேகாரோக்கியத்துக்கு மிகவும் இன்றியமையாததாகும். இது அத்துணைமுக்கியமானபடியாற்றான் அரசாங்க சுகாதாரப் பகுதி இல்லிடங்களையும், அவற்றின் சூழல்களையும் பார்வையிடுவதற்கும், இல்லங்களில் வசிப்போரைச் சுத்த விஷயமாய் ஊக்கப்படுத்துவதற்கும் சுகாதாரபரிசோதகர்களை நியமித்திருக்கிறது. அதேபோல நமதுஆத்துமமும் வசித்திருக்கும் ஓர் "வீடு" உண்டு. அதுதான் நமது இருதயம். எவ்வளவாக நாம் இருதயசுத்தமாய் இருக்கிறோமோ அவ்வளவாக நமதுஆத்துமம் நல்லஆரோக்கியமாக இருந்து வரும். நமது இல்லிடத்தை — வீடு வாசலை அசுசிப்படுத்துவ... தூசியும், குப்பை கூழங்களுமாகும். நாம் தினமும் நமது இல்லிடத்தைத் துடைத்துப் பெருக்கிச் சுத்தஞ்செய்யாவிடில் அசுத்தமே தேங்கத் தொடங்கிவிடும். அதனால், வீடுவாசலைச் சுத்தஞ்செய்வதில் நாமெல்லாம் எவ்வளவோகவனம் செலுத்துகிறோம். அதேபோல நமது ஆத்துமத்தின் இல்லிடமாகிய இருதயத்தை அசுசிப்படுத்தும் தூசிகளும், குப்பைகூழங்களும் தினமும் நாமகட்டிக்கொள்ளும் பாவ மாசுகளேயன்றி வேறன்று. நாம் ...சீவியம் சீவிக்க வேண்டுமானல் உள்ளும்புறமும் சுத்தமுள்ளவர்களாய் இருக்கவேண்டும். "தூய இருதயமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; ஏனெனில், அவர்கள் சர்வேசுரனைத் தரிசிப்பார்கள்" (மத். 5:8). "வெளிச் சுத்தம் உள்சுத்தத்தைக் காட்டும் கண்ணாடி". "அகத்தின் அழகு முகத்தில் விளங்கும்". "தூய்மை தெய்வத்தன்மை உடையது" என்பன பழமொழிகள். நமது ஆன்ம இல்லிடமாகிய இருதயத்தைப் பாவங்களின் இல்லிடமாக்காது அதனை எப்பொழுதும்பாவசங்கீர்த்தனமென்று சாதாரணமாக அறியப்படுகின்ற பச்சாத்தாபத்தால் சுத்தப்படுத்திப் பளிங்குபோல் காப்பாற்றவேண்டும். அர்ச். இராயப்பரின் கரத்தில் ஆண்டவர் கொடுத்தஅந்த "சுவர்ணதிறவுகோல்" பாவசங்கீர்த்தனம்தான். இந்தத்திறவுகோலின்றி நாம் மோட்சவாசலைத் திறந்து உட்பிரவேசிக்க முடியாது. ஆகையால், இதனைநாம்தகுந்தவண்ணம் பெற்று மோட்சகரைசேர நம்மாலியன்றமட்டும் வருந்துவோமாக!

## புதிய சேமக்காலை

சென்ற 2-11-57 சனிக்கிழமை சகல ஆத்துமாக்கள் திருநாளன்று கரம்பனில் ஓர்புதியசேமக்காலை ஆசீர்வதிக்கப்பெற்றுப் பாவனைக்குத் திறந்துவைக்கப்பட்டது. நெடுங்காலமாகக் கரம்பன்கிறீஸ்துவர்கள் கனவுகண்டுகொண்டிருந்த சேமக்காலையானது கரம்பன் கிறீஸ்துவர்களது ஆதரவாலும், வண. எம். எஸ். ...லையா சுவாமியவர்களது அயராஉழைப்பினாலும் கைகூடிவிட்டது. இவ்வளவுகாலமும் கரம்பன் கிறீஸ்துவர்கள் பிரேதஅடக்கத்திற்கு ஊர்காவற்றுறைக்குச் செல்லவேண்டியிருந்தது. அதனால்அவர்கள் நெடுந்தூரஞ்சென்று மிகவுங்கஷ்டப்பட்டுவந்தார்கள். இந்தக்கஷ்டம் இப்பொழுது நீங்கியது. புதியசேமக்காலையிலே அமைக்கப்பட்டிருந்தகோயிலில் ஆத்துமாக்கள்திருநாளன்றே திவ்வியபூசை நிறைவேற்றிச் சேமக்காலையும் ஆசீர்வதிக்கப்பட்டது. இங்கு அமைந்திருக்கும் கோவிலிலேயே பிரேதசேமச் சடங்குகள் நிறைவேறும். சேமக்காலையில் முதன்முதலாகச் சேமிக்கப்படும் அதிர்ஷ்டம் மெலிஞ்சிமுனையைச் சேர்ந்த ஓர்வயோதிபமாதிற்கு கிடைத்துள்ளது. சென்றவாரம் இப்பிரேத அடக்கத்தைப்பார்ப்பதற்குப் பெருந்தொகையானோர் சேமக்காலைக்கு வந்திருந்தனர்.

— நிருபர்

## அர்ச். சவேரியார் திருநாள்

### திருநெல்வேலி — 1957

இத்திருநாள் வழமைபோல வருகிற 3-12-57 செவ்வாய்க் கிழமை காலை 7 மணிக்குப் பாடற்பூசை, திருச்சுரூப சுற்றுப்பிரகாரத்துடன் முடிவாகும். திருநாளுக்குமுந்திய நோவனைகள் கார்த்திகை 24-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகும். கடைசிவேஸ்பர் மார்கழி 2-ந்திகதி திங்கட்கிழமை.

24-11-57 முதல் 1-12-57வரை நோவனைகள் பிற்பகல் 4-45 மணிக்கு ஆரம்பமாகி 5-45மணிக்கு முடிவாகும். 28-ந்திகதி வியாழக்கிழமைதொடக்கம் 2-ந்திகதிவரையும சாயந்தரவேஸ்பருக்குப்பதில்திவ்வியபூசைகள்நிறைவேறும்.

3-ந்திகதி செவ்வாய்க்கிழமை காலை 5-30மணிதொடக்கம்திவ்வியபூசைகள் தொடர்ந்துநிறைவேறும். பாடற்பூசை 7மணிக்கு. பூசைமுடிந்ததும், திருச்சுரூப சுற்றுப்பிரகாரத்துடன் திருநாள்முடிவாகும். மழைகாலமாய் இருப்பதால் யாழ்ப்பாணப்பட்டணக் கிறீஸ்துவர்கள் வந்துபோகும்வசதிக்காக நவதினவிழாக்கள் நேரத்தோடு தொடங்கி, நேரத்தோடுமுடிவது நலமாகும். அர்ச். சவேரியார் உங்கள்எல்லோரையும் ஆசீர்வதிப்பாராக!

சாயந்தர திவ்வியபூசைக்குமுன் பாவசங்கீர்த்தனம் கொடுக்கப்படும். சாயந்தரம் திவ்வியநற்கருணை பெறவிரும்புவோர் சற்பிரசாத உபவாசஒழுங்குகளை மறந்துவிடப்படாது. பூசைக்குமுந்திய மூன்றுமணித்தியாலங்களுள் கடின உணவுகளையும், மஸ்தானபானங்களையும் அருந்தலாகாது. ஒருமணித்தியாலத்துக்குமுன் தேநீர்போன்ற பானங்களைப் பருகலாம். ஆனால், பூசைக்குமுந்திய ஒருமணித்தியாலத்துள் வெறுந்தண்ணீர்அல்லாது வேறுஎந்தப் பானத்தையும் பாவிக்கப்படாது.

— கட்டளைக்குரவர்

● வானவெளியில் உலாவிவரும் உயிருள்ள ஒருபிராணியின் நிலைபற்றி அறிந்துகொள்வதற்காகவே 'லெய்கா' என்றநாய் இரண்டாவது செயற்கைச் சந்திரனில்வைத்து அனுப்பப்பட்டதாம். இதன்மூலம் 'கொஸ்மிக்'கதிர்களினூடாக மனிதனும் ஒருகாலத்தில் ஆகாயவீதியில் பிரயாணஞ்செய்வது சாத்தியமாகலாமென்று சொல்லப்படுகிறது.

● சந்திரனைப்போன்ற பிரகாசமுடைய ஓர்பெரியபொருள் சென்ற 11-ந்திகதி திங்க...கிழமை வானத்தில்மிதக்க ஜப்பான்...ங்கும் காணப்பட்டதாக ரோக்கி...நகரிலிருந்து செய்தி கிடைத்...ருக்கிறது. அங்கு பலவிடங்களிலும் ...காணப்பட்டதாகச் சொல்லப்படும் இ...தன்நிறம் கரும்பச்சையாயும், இளம்பச்சையாயும் இருந்ததென்று பலமாதிரியாகச் சொல்லப்படுவதாய் ஜப்பானிய வானசாஸ்திர அவதான நிலையம் அறிவித்துள்ளது.

## நன்றியறிந்த ஸ்தோத்திரங்கள்

பரிசுத்த சதாசகாயமாதாவின் இரக்கத்தினலும், அர்ச். அந்தோனியார், அர்ச். ஆரோக்கியநாதர் இவர்களின் மன்ருட்டினலும் எனதுகணவருக்கு இருந்த கொடியவியாதி குணமானது. இவர்கள் நாமம் புகழப்படுவதாக. நேர்த்திப்படி இதைப்பிரசுரிக்கிறேன்.

ஈச்சமோட்டை E. M.

* * *

யேசுவின் திருஇருதயத்தின் இரக்கத்தினலும், பரிசுத்த சதாசகாயமாதா, அர்ச். அந்தோனியார், அர்ச். சவேரியார், சகலஅர்ச்சியசிட்டர்கள் இவர்களின் மன்ருட்டினலும் எனதுவியாதி சுகமானது. இன்னும் எனக்குப் பூரணசுகமருளப்பிரார்த்திக்கிறேன். நேர்த்தியின்படி இதைப்பிரசுரிக்கிறே... பிரசுரிக்கப்பிந்தியமைக்கு மன்னிப்புக்கோருகின்றேன்.

சிலுவைமுத்து ஆபிரகாம்
குயின்ஸ்பெரி தோட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புனிதவீரர் பக்கம்



*அருமைச் சகோதரங்களே !*

காலையில் பூசைகண்டு நற்கருணை உட்கொண்டு ஒவ்வொருநாளையும் தொடங்கும் இருவரைப்பற்றிப் பிலிப்பைன் தீவுகளிலும், மலாயாவிலுமிருந்து வந்தசெய்திகள் கூறுகின்றன.

அவர்களில் ஒருவர் மனுவேல் மனஹறன். பிலிப்பைன் தீவுகளின் சனாதிபத்திய தேர்தலுக்குத் தோற்றியிருக்கும் முன்னேற்றக் கட்சியின் தலைவர் அவர்.

மற்றவர் ஓர்சீனர். லேயோங் யூ கோஹ். சுதந்திர மலாயாவின் ஐக்கியத்தில்உள்ள மலாக்காவின் முதற்தேசாதிபதி.

ஸ்ரீ மனஹறன் முன்ஓர் பத்திரிகாசிரியரா யிருந்தார். பிலிப்பைன் தொழிலாளரின் அமோகமான ஆதரவு பெற்றிருக்கிறார்.

ஐக்கிய மலாயாவில் சுகாதார சமூகநல மந்திரியா யிருந்து தற்பொழுது தேசாதிபதியாய் நியமனம் பெற்றிருக்கும் லேயோங் சட்டம், அரசியல், பொருளாதாரம், சமூகவியல் ஆதியாம்கலைகளை லண்டன் பல்கலைக்கழகத்திற் பயின்றார். மலாயாவிற் பிறந்தாலும் ஆரம்பக்கல்வி சீனாவிற்கற்றார். பின்பு பீனாங்கில் கிறிஸ்துவ விறதர்மார் நடாத்தும் அர்ச். சவேரியார் கல்லூரியிற் கல்விபயின்றார்.

அர்ச். சவேரியார் ஐந்துமுறை தரிசித்ததும், கோவைக்குக் கொண்டுசெல்லுமுன் ஐந்துமாதங்களாக அவருடையசடலம் புதைக்கப்பட்டதுமான இடம் மலாக்கா. "சவேரியார் பட்டணம்"எனச் சிறப்புப்பெயரும் உண்டுஅதற்கு. இத்தகைய பிரதேசத்துக்கு உத்தமகத்தோலிக்கர் ஒருவர் அதிபதியாய் நியமனம் பெற்றிருப்பது பொருத்தமான தன்றோ. உத்தமகத்தோலிக்கர், உத்தம தேசபக்தர்.

அண்ணா.

---

## புதுநன்மை வாங்குபவர்களின் பாதுகாவல்

இமெல்தாஎன்னும் சிறுபெண் புதுநன்மை வாங்குவதற்கு ஆயத்தமாக ஞானோபதேசம் படிக்கும்போது, யேசுவின்பேரில் அதிகநேசம் கொண்டு அவரை உட்கொள்ளும் பாக்கியமானநாள் எப்போவருமெனப் புண்ணியங்களினால் தன்ஆத்துமத்தை அலங்கரித்து வந்தாள். அக்காலத்தில் சிலஇடங்களில் வழங்கிவரும் வழக்கப்படி 12 வயதுக்கு மேற்பட்டவர்கள்தான் புதுநன்மை வாங்கலாமென்றிருந்தது. அப்படிப குருவானவர் இமெல்தாவை நன்மைவாங்காமல்தடுத்துவிட்டார். ஆனால், இமெல்தா விசனப்படவில்லை. தினந்தோறும் பூசைக்குச்சென்று சற்பிரசாத யேசுவைப்பார்த்து மன்றாடுவாள். புதுநன்மைகொடுக்கும் நாள்வந்தது. மற்றப்பிள்ளைகளும், பெரியவர்களும் சற்பிரசாத பந்தியில் அமர்ந்தார்கள். இமெல்தா நடுச்சாமம் தொடங்கி ஒன்றும்புசியாமல்இருந்து திவ்வியபூசையைக் கண்டாள். ஒவ்வொருவரும் கிறாதியண்டைசென்று நன்மைவாங்கும்போது தனக்கும் இப்பாக்கியம் கிடைக்கும்படியாக மன்றாடினாள். குருவானவர் நன்மைகொடுத்துக் கொண்டிருக்கையில் ஓ ! ஆச்சரியம்! குருவானவர் கையில்இருந்த திவ்விய சற்பிரசாதம் இமெல்தாவின் தலைமேல்போய் நின்றதைக் குருவானவரும், விசுவாசிகளும்கண்டு ஆச்சரியப்பட்டனர். குருவானவர் அவள்அருகில்வந்தவுடன் அவள் தலைமேல் இருந்தசற்பிரசாதம் குருவானவர் கையில் வந்துநின்றது. குருவானவர் அச்சிறுமிக்கு நன்மை கொடுத்தவுடன் ஆனந்தத்தால் அவ்விடத்திலேயே உயிர்விட்டாள். திருச்சபை இவளைப் புதுநன்மை வாங்குபவர்களுக்குப் பாதுகாவலராகக் கொண்டாடுகிறது.

— ரெக்ஸ்

---

## தாயும் சேயும்

"டாண்...டாண்.. டாண்..."

வகுப்புகள் ஆரம்பமாவதை அறிவிக்கும் வெண்கலமணியோசை அந்தப்பாடசாலை முழுவதும் பரந்து வியாபித்தது.

கணக்குவாத்தியார் நல்ல தம்பி ஆறுவது வகுப்பறையில் நுழைந்தார். அந்தவகுப்புமாணவர்கள் மிகவும் பரபரப்புடன் காணப்பட்டார்கள். அவர்களது கண்களெல்லாம் வாத்தியாயரின்கையை நோக்கின. அவர்கள் எதிர்பார்த்தது அங்கே காணப்பட்டது. அது என்ன? அதுதான் முதல்வாரம்நடந்த கணக்குப் பரீட்சையின் திருத்தப்பெற்ற விடைத்தாள்கள். ஒவ்வொருவர்மனதிலும் 'தனக்குஎன்னபுள்ளிவந்துள்ளதோ'என்ற ஆவலும், பயமும் நிறைந்துகாணப்பட்டது.

பாலுவுக்குத் தனது விடைத்தாள் கிடைத்தது. அவன் அவசரப்படவில்லை. பதற்றமடையவில்லை. நிதானமாகச்சென்று வாங்கினான். தனக்குக்கிடைத்த புள்ளியைக்கண்டதும் ஆனந்தஅதிர்ச்சிதான் அவனுக்குண்டாயிற்று. ஆச்சரியம் ஒருபுறம். ஆனந்தம் ஒருபுறம். மகிழ்ச்சியால் திக்குமுக்காடினான் பாலு. மீண்டும் மீண்டும் நோக்கினான். அவன் கண்களை அவனாலேயே நம்பமுடியவில்லை. உள்ளத்திலே உவகை பெருக்கெடுத்தது. தனக்கா அவ்வளவு புள்ளி என்றபெருமை அவனுக்கு. எப்போது வகுப்புமுடிவடையும் எனக்காத்திருந்து, ஓட்டமும், நடையுமாக வீட்டைஅடைந்தான். தனக்குக்கிடைத்த புள்ளியைப்பார்த்துத் தாயும் மனம்பூரிக்கவேண்டுமென்ற கட்டுக்கடங்காத ஆசைஅவனுக்கு.

தன்மகன் கணக்குப் பரீட்சையிலே பெற்ற புள்ளியைக் கண்ணுற்ற தாய் ஈன்றபொழுதிலும் பெரிதுவந்தாள்.

"கண்ணே பாலு, நீயாடா இந்தப் புள்ளிவாங்கியிருக்கிறாய்? செல்வமே என்மனம் எப்படிப்பூரிக்கிறது தெரியுமா ?" என்றபடி பாலுவை வாரியெடுத்து, உச்சிமுகர்ந்து ஆனந்தக் கண்ணீர் உகுத்தாள் தாய்.

பாலுவும், அவனதுதாயும் இவ்வாறு மகிழ்ச்சிக்கடலில் திளைக்கும்படி அவன்வாங்கிய புள்ளிஎன்ன ? எழுபதோ, எண்பதோ இருக்கும் என நீங்கள்நினைத்தால் நிச்சயம் ஏமாற்றந்தான். பிறகு ?

பாலுவாங்கிய புள்ளி பதினைந்தேதான். பின்பு ஏன் அவனுக்கு அவ்வளவு குதூகலம் ! ஆச்சரியமாக இருக்கிறதல்லவா ? இதுவரையிலும் கணக்கிலே பூச்சியத்தைத்தவிர வேறெதுவும் பெற்றறியாத பாலுவுக்கு இந்தப்பரீட்சையில் முழுசாகப் 15 புள்ளி கிடைத்துவிட்டால் ஆச்சரியமும், சந்தோஷமும் அடையாமல் என்னசெய்வான் ?

தன்மகனுக்குக் கணக்கிலே 15 புள்ளி பெறும்திறமைகூட வந்துவிட்டதாஎன்ற நினைப்பிலே. தாய் மனம் மகிழ்ச்சிபெறுமல் என்னசெய்வாள் ?

எப்படி தாயும் சேயும் ?

---

## சிந்தையில் சேர்த்திடு

நல்லாரை நாடிடு
நல்லசொல்லே சொல்லிடு
தீயாரை நீங்கிடு
தீயசொல்லை நீக்கிடு
எதனையுஞ் சீர்தூக்கி
அதனிலே நல்லதைச்
சிங்காரச் சிட்டுநீ
சிந்தையில் சேர்த்திடு
தலைசிறந்த அறிஞரின்
நல்லநல்ல கருத்தினை
நிலையாக நெஞ்சினில்
ஏற்றிக்கொண்(டு) எண்ணிடு
குறளெனுஞ் சிறந்திட்ட
நீதிநிறைக் கடலினைக்
கற்றுநீ தெளிந்திடு
ஏற்றங்கொண் டிருந்திடு

குறிப்பு:— மேலேயுள்ள கவிதையைப்படித்த உங்களிடம் ஒருகேள்வி: இந்தக் கவிதையில் ஒருபுதிய விஷயம் மறைந்திருக்கிறது. நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டியதைத் தெரிந்தால் ஆச்சரியமடைவீர்கள். உங்களுக்கு ஏதாவது அப்படித் தெரிகிறதாஎன்று பாருங்கள். இல்லையென்றால் அடுத்தபக்கத்திலுள்ள விடையைப்பார்த்துத் தெரிந்து கொள்ளுங்கள்.

அ. இ.

## வானொலியின் தந்தை

வடஇத்தாலியில் ஒரோப்பாமலைச் சேத்திரத்தில், தேவதாயாரின்சிற்றாலயத்தில் ஓர்முதியவர் தியானத்தில் ஆழ்ந்து, பல மணித்தியாலங்கள் செலவிட்டார். மாலையானபோது மலையைவிட்டுப் பட்டணத்துக்குவந்தார். வழியில் நண்பன் ஒருவனைச் சந்தித்தார்.

"யோசேப், மாதாவின் திருசேத்திரத்தில் புதியதோர் எண்ணம் எனக்குத்தோன்றியிருக்கிறது. நூதன இயந்திரமொன்றை ஆக்கஎண்ணுகிறேன். அது என்னஎனப் பின் தெரிந்துகொள்வீர்.

இப்பொழுது அக்கோயில் பீடவாசலிலிருக்கும் கற்பலகைஒன்று அந்த "நூதன இயந்திரம்" என்ன எனக்கூறுகிறது. "ஒரோப்பாமலைக் கோவிலிலிருந்து உவில்லியம் மார்க்கோனி தமது புதிய சாதனமொன்றைக் கண்டுபிடிக்கும் ஏவுதலைப் பெற்றார். மாதாவின் பாதுகாவலில் தூரசிரவணக்கருவி கிறீஸ்துவின் சமாதானத்தை உலகமக்களுக்கு அளிக்கட்டும்."

---

"சாவானபாவத்துடன் இருக்கிறவர்களுக்காக மன்றாடிக்கொள்வது மகாஉச்சிதமான தருமமாகும்."

அவிலாவின் அர்ச். தெரேசம்மாள்

---

## விலைமதிப்பற்றது எது?

— மிந்து —

இதமான மாலைநேரத்தின் மஞ்சள் வெயில் பழையனூர்க் கிராமத்து வயல்களைப் பொன்னிறமாக்கிக் கொண்டிருந்தது. விவசாயிகள் தாம்உழைத்த அலுப்புத்திரத் தெம்மாங்கு பாடிக்கொண்டு வீடுநோக்கி நடந்துகொண்டிருந்தார்கள். ஒன்றிரண்டு மாட்டுவண்டிகள் "ஜல்ஜல்" என்ற சதங்கைச் சப்தத்துடன் கிராமத்தின் உட்புறத்தை நோக்கி ஓடிக்கொண்டிருந்தன.

ஆனால், ஆனந்தனோ பழையனூரைவிட்டு எதிர்ப்பக்கமாகத் தனது சைக்கிளில் சென்றுகொண்டிருந்தான். ஆனந்தன் சென்றுகொண்டிருந்த திசையிலேதான் மேற்பாலம் இருந்தது. இதுவும் ஒரு கிராமம். இக்கிராமத்துக்கு ஊடாக ஒரு நதி பாய்கிறபடியால் ஆங்காங்கு பல பாலங்கள் காணப்பட்டன. எனவே, 'மேற்பாலம்' என்ற காரணப்பெயர் ஏற்படலாயிற்றும்.

நெற்றியில் மேற்பாலநதிபாயுமாப்போலப் பாய்ந்துகொண்டிருந்த வியர்வையை அலட்சியமாய்த் துடைத்துவிட்டுக் கைக்கடிகாரத்தைப் பார்த்தான் ஆனந்தன்— நேரம் நாலரைமணி.

"சுவாமியாரைக் காண்போமா, இல்லையா ?" என்று குதிர்போட்டுக் கொண்டிருந்த மனத்தைச் சமாதானப்படுத்திவிட்டுத் தன்கால்களுக்கு "போதும்போதும்" என்று சொல்லும்படி வேலைகொடுக்க ஆரம்பித்தான். இவ்வளவு வேகமாக ஆனந்தன் மேற்பாலத்துக்குப் போகும் இரகசியம் இதுதான்.

ஆனந்தனுடைய ஊராகிய பழையனூரில் சைவர்களே அதிகம். நூற்றுக்குப் பத்துவிகிதம்தான் கத்தோலிக்கர். இந்நிலையில் அங்கே குருவானவர் இருப்பது சாத்தியமில்லை.

ஆனால், நதியால் போஷிக்கப்படும் மேற்பாலம். முழுவதும் கத்தோலிக்கர்களையேகொண்ட ஓர் கிராமம். அங்கே மூன்று தேவாலயங்கள் இருந்தன. விசாரணைப்பங்குக் குருவானவரின் வாசஸ்தலமும் மேற்பாலத்திலேயே இருந்தது. ஆகவே, பழையனூர்க் கிறீஸ்தவர்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்மதேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு மேற்பாலக் கட்டளைக்குரவரான வண. பிரான்சிஸ் சுவாமியார்தான் பழைய னூருக்குப் போக வேண்டியிருந்தது. வண. பிரான்சிஸ் சுவாமியாரின் கடும்உழைப்பின்பயனுகவே இன்றுவரையும் பழையனூர்க் கத்தோலிக்கவாசிகள் சமய நெறி தவருது வாழ்ந்துகொண்டிருந்தனர்.

ஆனந்தனுடைய பெற்றூர்கள் உத்தமகத்தோலிக்கர்கள். அவர்கள் சைவசமயத்தவர்கள் மத்தியில் சீவித்தாலும், தங்களுடைய முன்மாதிரிகையால் ஏனையோரைக் கவர்ந்துகொண்டனர். சைவசமயத்தவர்களும் ஆனந்தனுடைய பெற்றூர்களிடம் அன்புகாட்டி வந்தனர். ஆனந்தனும் தனது தாய்தந்தையர்க்கு ஏற்பட்டுள்ள கீர்த்தியை அவதானித்து உத்தமனுக வளர்ந்து வந்தான். "பிள்ளையென்றுல் ஆனந்தனல்லவோபிள்ளை!" என்று பழையனூர்வாசிகள் மெச்சுமளவுக்கு ஆனந்தன் குணசாலியாக இருந்தான்.

ஆனந்தனுடைய பெற்றூர்களுக்கு வேலைசெய்துவந்தவர் ஓர் சைவ மூதாட்டி. ஆனந்தனின் அப்பாவுக்கு வேலைமாற்றலாகிப் பழையனூருக்கு வந்தவுடனேயே ஜானகியம்மாள் என்றஅம்மூதாட்டி வேலைக்கமர்ந்து கொண்டார். ஜானகியம்மாளுக்குச் சமையல்செய்வதே வேலையாயிருந்தாலும், ஒழிந்தநேரங்களில் ஆனந்தனுடைய அம்மாவோடு அளவளாவுவார். புத்திமதிகள் சொல்லுவார். இரவிலே ஆனந்தன் குடும்பத்தினர் செபிக்கும்போது கவனித்துக் கொண்டிருப்பார். அவர்களுடைய சமயசம்பந்தமான தொழில்களை அவதானித்துக் கொள்ளுவார். கத்தோலிக்கபுத்தகங்களை ஆனந்தனுடைய அம்மாவிடமிருந்து வாங்கி வாசிப்பார். உண்மையாக ஜானகியம்மாள் ஆனந்தனுடைய சொந்தப் பாட்டிபோன்று அந்தக்குடும்பத்துடன் இரண்டறக்கலந்து விட்டார்.

ஆனுல், ஒருநாள் அவரைப்பீடித்த சுரம் அவரைப் படுத்தபடுக்கையினின்று எழும்பவிடவில்லை. இரண்டு நாள்விடாது காய்ச்சல் காய்ந்தது. மூன்றும்நாள் சாயந்தரம் டக்றர் கைவிரித்துவிட்டார். "வயோதிபதசை நம்பமுடியாது" என்று ஆணித்தரமாகச் சொன்னுர்.

இச்சமயத்திலேதான் ஓர்ஆச்சரியம் நடந்தது. ஆனந்தனுடைய அப்பாவிடம் "நான் உங்கள் சமயத்துக்கு வரவிரும்புகிறேன்" என்று ஒருவாறு கஷ்டப்பட்டு ஜானகியம்மாள் சொல்லிவிட்டார். எல்லோரும் பிரமித்துநிற்கும்போது ஆனந்தன் ஒரேஓட்டமாய் வெளியேசென்றுன். சைக்கிளில்பாய்ந்த ஆனந்தன் தன் பலத்தையெல்லாங்கூட்டிச் சைக்கிளை வேகமாகச் செலுத்தினுன்.

* * *

ஆனந்தன் மேற்பாலத்தைஅடையச் சிறிதுநேரமெடுத்தது. 'சோ' வென்று வீசிய கடுங்காற்று "உன்னைப்போகவிட்டால் நான் காற்று அல்ல" என்பதுபோலே எதிராக வீசியது. ஆகவே, ஆனந்தன் மேற்பாலத்தை அண்மியபோது நேரம் ஐந்தரைஆகியிருந்தது. இலேசாக இருள்பரவும் இந்நேரத்திலே சிறிது தூரத்தில் 'ஜல ஜல' என்று ஓடும் அருவியின் பிரவாகஓசை கேட்டது. அந்த ஆற்றுப்பிரவாகம் வீதியின் கீழாகக் குறுக்கே ஓடுவதற்காக ஒரு மதகு கட்டப்பட்டு இருந்தது. அந்த மதகின்ஓரத்திலே மூட்டைபோன்ற ஒரு வஸ்துஇருப்பதை ஆனந்தன் கண்டான்எனினும், அவனுடைய அவசரத்திலே அதைக்கவனிக்க அவகாசமில்லாமற்போய்விட்டது.

சிறிதுநேரத்தில் ஆனந்தன் குருமனையைச் சமீபித்தான். மிகஉயர்ந்த சிகரத்துடன் விளங்கிய அந்தமாதாகோவில், கிராமவாசிகளால்சூழப்பட்டுஇருந்தது. குருமனையிலும் அப்படியே! பலர் கூட்டங்கூட்டமாகநின்று கலவரத்துடன் கதைத்துக்கொண்டிருந்தனர். எல்லோருடைய வதனத்திலும் துயரம்காணப்பட்டது. எதனையோ பறிகொடுத்தவர்கள்போல் நின்றுகொண்டிருந்தனர். ஆனந்தன் சிறிதுநேரம் சனக்கூட்டத்தையே பிரமையுடன்பார்த்துக்கொண்டிருந்தான். பின்பு தனியாகநின்ற ஒருவரிடம் "என்ன நடந்துவிட்டது?" என்று கேட்டான். அவரிடம் அவன் அறிந்துகொண்ட வரலாறு இதுதான்.

(வளரும்)

# உத்தரிக்கிற ஸ்தலத்து ஆத்துமாக்கள்

ஒருபக்தியுள்ள பெண்பிள்ளை தன் சீவியநாட்களில் உத்தரிக்கிற ஆத்துமாக்கள் அவதிகுறையும்படி தானதருமங்கள், ஒருசந்திஉபவாசம், பலிபூசைசெய்வித்தல்ஆகிய நானுவித நற்கிருத்தியங்கள் செய்துவந்தாள். இவளுக்கு அந்தியகாலம்நெருங்கிச் சாகுந்தறுவாயில் இருக்கும்போது அந்தகாரப்பிசாசுகள் இவளைச்சுற்றி வந்து இவளுக்குப் பயத்தைமூட்டிச் சர்வேசுரனுடைய தயைமட்டில் அவநம்பிக்கை உண்டாகும்படி சர்வபிரயத்தனஞ்செய்தன. அத்தருவாயில் இவள் தனக்கு உதவிசெய்யும்படியாகச் சர்வேசுரனைக் கெஞ்சி மன்றுடினுள். பசாசுகள் முன்னிலும்அதிகமாய் இவளை உபத்திரவப்படுத்த முயற்சித்தபோது, அவள் கண்ணுக்கு மோட்சவாசல் திறக்கப்பட்டதுபோலவும், அங்கிருந்துஆயிரக்கணக்கான மோட்சவாசிகள் இறங்கி வருவதைக்கண்ட பிசாசுகள் ஓடிப்போவதையும் கண்டாள்.

இவர்கள் எல்லோரும்வந்து இவளுக்கு ஆறுதல்சொல்ல அவள் ஆயாசம்நீங்கித் திடனும், தைரியமுங் கொண்டாள். இதனுல் மிகவும்ஆறுதல்அடைந்து அவர்களை நோக்கி, "நீங்கள் யார்?" என்று வினவினுள். அதற்கு அவர்கள் சொன்னதாவது: "உன்னுடைய புண்ணிய பலன்களால் உத்தரிக்கிறஸ்தலத்தினின்று மோட்சத்துக்குப்போனவர்கள்நாங்கள். இப்பொழுது எங்களுடைய நன்றியைக் காண்பிக்கும்படியாகவும் உனது மரணத் தருவாயில் உனக்குவேண்டிய உதவி புரிந்து உன்னைப் புடைசூழ்ந்து பரகதிக்குக் கூட்டிக்கொண்டுபோகவும் வந்திருக்கிறேம்" என்றனர். இவள் இதைக் கேட்டதும் உள்ளம் பூரித்தாள். சிறிது நேரத்துக்குள் பாக்கியமாய் மரித்து, பரிசுத்த ஆத்துமாக்கள் புடைசூழ மோட்சத்துக்குப்போனுள்.

## 7-ம்பக்கத்துக் கவிதைபற்றிய விடை

அக்கவிதையில்உள்ள புதுமை இதுதான்: மேல்உதடும், கீழ்உதடும் ஒன்றுடன்ஒன்று ஒட்டாமல் அதைப்படிக்கலாம்; பாடலாம். இப்படிப்பாடப்படும் கவிதை தமிழ் இலக்கணத்தில் "நிரோட்டகம்" என்று சொல்லப்படும். எங்கேஇப்போது படித்துப்பாருங்கள் மறுபடியும்!

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 1427**

**யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டில்**

மார்க்குப்பிள்ளை சவிரிமுத்து
— வழக்காளி.

எதிராக

சுண்டிக்குளி
1. ஜேக்கப் பிரான்ஸிஸ்சும்,
2. பெண் செலஸ்தீனுவும்
— எதிராளிகள்.

யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டின் M. B. 1427-ம்இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னுல்விபரிக்கப்படும் ஓர்துண்டுக்காணி 1957-ம்ஆண்டு மார்கழிமாதம் 17-ந்திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10மணி தொடக்கம் அந்தக்காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 1213-உம், இன்னும் ரூபா 900-த்திற்குப் 12-1-57 தொடக்கம் 24-5-57 வரையும் 100-க்குப் 12%வட்டியும், அதன்பின் கூட்டுத்தொகைக்கு இறுபடும் வரைக்கும் 100-க்கு 5%வட்டியும், கோட்டுச்செலவு 201 ரூபா 95சதமும். இதில் 75ரூபா கொடுபட்டது. வட்டியிலும், முதலிலும் 913 ரூபாகொடுபட்டது.

### காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளிக் கோயிற்பற்று, சுண்டிக்குளிஇறை "தியாகன்வளவு." ப. நி. இ. $1\frac{1}{2}$-யும், வீடும் தென்னைகளும், இதற்குரிய கிணற்றுப்பங்கும். எல்லை: கிழக்கு — பேரொழுங்கை முகப்பும் பத்திநாதர் ஜேம்ஸ் சின்னராசாவிற்கும், பெண் செல்வரெட்டினத்திற்கும் உரியஆதனம். வடக்கு — பத்திநாதர் ஜேம்ஸ் சின்னராசாவிற்கும், பெண் செல்வரெட்டினத்திற்கும், விஞசித்தம்பி கணகலிங்கத்திற்கும் உரிய ஆதனங்கள். மேற்கு — மனுவல் பெண் அன்னம்மாவிற்கும், இளையதம்பி பெண் அன்னப்பிள்ளைக்கும் உரியஆதனங்கள். தெற்கு — சரவணமுத்து ஆறுமுகத்திற்கும், ஆறுமுகம் நவமணிக்குமுரிய ஆதனங்கள். இதடங்கலும்.

செ. இரத்தினசபாபதி,
கொம்மிஷனர்.

24, சப்பெல் வீதி,
யாழ்ப்பாணம், 5-11-1957

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டில்**

**இல. M. B. 1022**

யாழ்ப்பாணம் நல்லூர்
இராமலிங்கம் கைம்பெண் தங்கரெட்டினம்
— வழக்காளி.

எதிராக

யாழ்ப்பாணம் நல்லூர் நாயன்மார்கட்டு
பெருமாள்பிள்ளை இராசகுலசூரியர்
— எதிராளி.

யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டின் M. B. 1022-ம்இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னுல்விபரிக்கப்படும் ஓர்துண்டுக்காணி 1957-ம்ஆண்டு மார்கழிமாதம் 21-ந்திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தக்காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 1170-உம், இன்னும் ரூபா 1000-த்திற்கு 8-6-56 தொடக்கம், 30-8-56வரையும் 100-க்குப் 12%வட்டியும், பின்பு கூட்டுத்தொகைக்கு இறுபடும்வரைக்கும் 100-க்கு 5%வட்டியும், கோட்டுச்செலவு 190 ரூபா 63 சதமும்.

### காணிவிபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் வலிகாமம்கிழக்குப் பகுதி கோப்பாய் கோயிற்பற்று, சோப்பாய்தெற்கிறை "காட்டுவாசல்." நி. ப. 10. ஆனுல், ஆட்சிப்படியும், அளவின்படியும் நி. ப. .$19\frac{1}{2}$. இதில் வடக்குப்பக்கமாக அறுதிவிற்றது போக மிகுதி நி. ப. $9\frac{1}{2}$-யும், பயிர்வகைகளும், கிணறும். எல்லை: கிழக்கு — சிதம்பரப்பிள்ளை கைம்பெண் வாலாம்பிகையின் ஆதனம். வடக்கு — மிகுதிஆதனம். மேற்கு — கையொழுங்கை முகப்பும், எதிரியின் ஆதனமும். தெற்கு — எதிரியின் ஆதனம். இதடங்கலும். ஆனுல், கிழக்கெல்லைக் காணிக்காரியின் தெற்கெல்லைஓரமாகப்போகும் 4அடிஅகல முள்ளகைஒழுங்கையால் போக்குவரவுசெய்யும் உரித்தும், இன்னும் வாலாம்பிகையின் $2\frac{1}{6}$குளிவிஸ்தாரமுள்ள கைஒழுங்கையால் தெற்கேஇருக்கும் ரேட்டுக்குப் போக்குவரவுசெய்யும்உரித்துப் பிறநீங்கல்.

பதிவு இலக்கம் K. $\frac{184}{255}$.

செ. இரத்தினசபாபதி,
கொம்மிஷனர்.

24, சப்பெல் வீதி,
யாழ்ப்பாணம். 7-11-57

## பிழை திருத்தம்

சென்றவாரக் "காவல"னில் வெளியான கோட்டுவிற்பனவு விளம்பரத்தில் பராமரிப்புத் தத்துவ இல. 101 C என்றிருப்பதை பராபரிப்புத் தத்துவ இல. 101 C எனத் திருத்திக்கொள்ளவும்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 207**

**யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டில்**

கோண்டாவில்
1. சின்னத்தம்பி மதியாபரணமும்.
2. பெண் தங்கச்சியம்மாவும்
— வழக்காளிகள்.

எதிராக

யாழ்ப்பாணம், வண்ணூர்பண்ணை மேற்கு
வீரவாகு ஆசாரி சிவசம்பு ஆசாரி
— எதிராளி.

யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டின் M. B. 207-ம்இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னுல்விபரிக்கப்படும் பூநகரியில் ஒருதுண்டுக்காணி 1957-ம்ஆண்டு மார்கழிமாதம் 19-ந்திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தக்காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 845-உம், இன்னும்ரூபா 500-க்கு 2-5-55 தொடக்கம் 14-7-55வரையும் 100-க்கு 9%வட்டியும், அதன்பின் கூட்டுத்தொகைக்கு இறுபடும்வரைக்கும் 100-க்கு 5% வட்டியும், கோட்டுச்செலவு 161ரூபா 95சதமும்.

### காணிவிபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் பூநகரிப்பகுதி பூநகரிக்கோயிற்பற்று, ஞானிமடம் சின்னத்தீவுவயல். ப. நெ. இ. 50. எல்லை: கிழக்கு — நாகமுத்து சீவரெத்தினத்தின் ஆதனம், வடக்கும், தெற்கும் — அரசாட்சியாரின்காணி. மேற்கு— சின்னையா இராமலிங்கத்துக்குரிய மிகுதி ஆதனம். இதடங்கலும்.

பின்னல் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணி 1957-ம் ஆண்டு மார்கழிமாதம் 20-ந்திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணூர்பண்ணை கோயிற்பற்று, வண்ணூர்பண்ணை மேற்கிறை ஆலடிவளவும், நொச்சிக்காடும். ப. நி. இ. 3-உம், வீடும், பயிர்வகைகளும். மேற்கெல்லைக் காணியில்இருக்கும் கிணற்றில் பங்கும், வழிவாய்க்காலுரித்தும். எல்லை: கிழக்கும், வடக்கும், தெற்கும்— ஒழுங்கை. மேற்கு — சின்னத்தம்பி பொன்னுத்துரைக்கும், சகோதரனுக்கும் உரியஆதனம். இதடங்கலில் சொரியலாய் ப. நி. இ. $\frac{1}{2}$.

செ. இரத்தினசபாபதி,
கொம்மிஷனர்.
24, சப்பெல்வீதி,
யாழ்ப்பாணம். 5-11-57

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, November 14-1957.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org